Registered as a News paper in Ceylon

# ஈழநாடு

EELA NADU

ஈழநாடு
சந்தா விபரம்
வாரப்பதிப்பு உட்பட
ஒரு வருடத்துக்கு ரூபா 40-00
6 மாதத்துக்கு ரூபா 21-00
3 மாதத்துக்கு ரூபா 11-00

போன் 389 | National Tamil Daily | தேசிய தினசரி | தபாற் பெட்டி எண் 49

மலர் 5 | யாழ்ப்பாணம் | சுபகிருது | மாசி 18 ஆம் நாள் | ஷவ்வால் 5 | (2-3-63) | சனிக்கிழமை | இதழ் 2

# ராஜன்பாபு மறைவுக்கு நாடெங்கும் துக்கம்

## பாட்னு ராஜகட்டில் பூதவுடல் தகனம்

## ராஷ்டிரபதி முதன்மந்திரிகள் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினர்

பாட்னு, மார்ச் 1

நேற்றிரவு காலமான இந்தியாவின் முன்னுள் ஜனுதிபதி டாக்டர் ராஜேந்திர பிரசாத் தின் பூதவுடல் முழு ராஜாங்க மரியாதையுடன் இன்று நண்பகல் பாட்னு ராஜகட்டத்தில் தகனம்செய்யப்பட்டது. ஈமக்கிரியைகளில் ராஷ்டிரபதி டாக்டர் ராதாகிருஷ்ணன், இந்திய உள்விவகார மந்திரி திரு. லால்பகதூர் சாஸ்திரி, சர்வோதயத் தலைவர் ஜெயப்பிரகாஷ் நாராயண், பீகார், மேற்கு வங்க முதன் மந்திரிகள் ஆகியோரும் மற்றும் பெருந்தொகையான மக்களும் கலந்துகொண்டனர்.

ராஜன்பாபுவின் மரணத்துக்கு நாடு முழுவதும் துக்கம் அனுஷ்டிக்கிறது.

இந்தியப் பார்லிமெண்டின் இரு சபைகளும் இன்று காலஞ்சென்ற ராஜன்பாபுவுக்கு மௌன அஞ்சலி செலுத்தியது.

ராஜன்பாபுவின் ஆசிரமத்திற்கு வெளியே மூவர்ணக் கொடியால் அலங்கரிக்கப்பட்ட மேடை மீது ராஜன்பாபுவின் பூதவுடல் இன்று காலை வைக்கப்பட்டது. பெருந்தொகையான மக்கள் அங்கு திரண்டு வந்து காலஞ்சென்ற தலைவருக்கு தங்கள் இறுதி மரியாதையைத் தெரிவித்துக் கொண்டனர். புதுடில்லியிலிருந்து விசேஷ விமானத்தில் பாட்னு வந்து சேர்ந்த ராஷ்டிரபதி டாக்டர் ராதாகிருஷ்ணன், பூதவுடலுக்கு மலர்மாலை சாத்தி அஞ்சலி செலுத்தினுர்.

ராஜன்பாபுவின் பூதவுடல் ராஜாங்க மரியாதைகளுடன் ராஜகட்டத்துக்கு ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டபோது ஆசிரம வாதிகள் ராமபஜனை பாடிக்கொண்டு சென்றனர்.

### பார்லிமெண்ட் அஞ்சலி

ராஜன்பாபுவின் மறைவுக்கு இந்திய பார்லிமெண்ட்டின் இரு சபைகளும் இன்று அனுதாபத்தீர்மானம் நிறைவேற்றியதுடன் அங்கத்தவர்கள் எழுந்துநின்று இருநிமிடங்கள் மௌன அஞ்சலி செலுத்தினர்.

லோகசபையில் சபாநாயகர் சர்தார் ஹுக்கும்சிங் ராஜ்யசபையில் தலைவர் ஹாபீஸ் முகம்மது இப்ருகிமும் மற்றும் பல அங்கத்தினர்களும் ராஜன் பாபுவின் சேவையைப் பாராட்டி அஞ்சலி செலுத்தினர்.

(8-ம் பக்கம் பார்க்க)

## 'உங்கள் ஊரில் ஒப்பாரி வைப்பதுண்டா?'

— ஜி. ஜி.

### சரசாலை இரட்டைக்கொலைவழக்கு விசாரணை

சாவகச்சேரி, வெள்ளி

சரசாலை இரட்டைக் கொலை வழக்கில் எதிரிகள் சார்பில் ஆஜரான சிரேஷ்ட வழக்கறிஞர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் ஒருசாட்சியைக் குறுக்குவிசாரணை செய்கையில் 'உங்கள் ஊரில் ஒப்பாரி வைப்பதுண்டா?' என்று கேட்டார்.

சரசாலை இரட்டைக் கொலை வழக்கு இன்று சாவகச்சேரி கோர்ட்டில் நீதிபதி ஏ. வைத்திலிங்கம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

1963-ம் ஆண்டு தைமாதம் 14-ந் திகதி இரவு சரசாலையைச் சேர்ந்த சரவணையையும் சின்னத்தம்பியையும் துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்ததாக முத்தையா கணபதிப்பிள்ளை, பொன்னையா சுப்பிரமணியம், சின்னையா சுப்பிரமணியம், ஆறுமுகம் பொன்னையா ஆகியோர் இவ்வழக்கில்குற்றஞ்சாட்டப்பட்டுள்ளனர்

எதிரிகள் சார்பில் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம், திரு. சுந்தரலிங்கம், திரு. கே. வி.எஸ். சண்முகநாதன் ஆகியோர் உதவியுடனும் திருவாளர்கள்: எஸ். கே. திரவியநாயகம், ஆர். டி. சிவகுரு, வி. கனகசபை, செல்லத்தம்பி ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜரானுர்.

செல்லையா பொன்னையா சாட்சியத்தின்போது கூறியதாவது:

"காலஞ்சென்ற சரவணை என் சொந்தக்காரர். சம்பவம் நடந்தன்று நான் 9 மணிக்குப் படுக்கைக்குப் போனேன். என் வீட்டுக்கு வடக்குப்பக்கமாக 2 மணிக்கு வெடிச்சத்தம் கேட்டது. இரண்டு மூன்று வெடி அடுத்தடுத்து கேட்டதைத் தொடர்ந்து ஒரு பெண் குளறியது கேட்டது. நான்வெளியே ரோட்டுக்கு வந்தேன். நல்ல நிலவு. ஆறுமுகம் பொன்னையாவின் வீட்டுப் பக்கத்தால் வந்தேன்.

### ஆறுதலாக நடந்தேன்

அப்பொழுது பொன்னையா வீட்டில் யாரோ கதைத்துக் கேட்டது. நான் ரோட்டில் ஆறுதலாக நடந்து வந்தேன். பத்துயார் போனதும் ரோட்டில் ஒருவெடிச்சத்தம் கேட்டது. நான் பயந்து பத்து நிமிடம் வேலியோடு நின்றேன். அதன்பின் குளறிய சத்தம் வந்த வீட்டை நோக்கிப் போனேன். சரவணை வீட்டில் படலை அரைவாசி மட்டும் சாத்

(7-ம் பக்கம் பார்க்க)

கோயில்ஐயர் கொலைவழக்கு

## மூவர்மீதும் கொலைக் குற்றச்சாட்டு





கோயில் ஐயரும் — கோகிலாம்பாளும்

சாவகச்சேரி, வெள்ளி

உருத்திரபுரம் கோயில் ஐயர் காசிலிங்க சர்மா கொலை செய்யப்பட்டது சம்பந்தமாகக் கைது செய்யப்பட்ட முத்தர் வேலுப்பிள்ளை, பசுபதி, ஐயரின் மனைவி கோகிலாம்பாள் ஆகியோர் மீது இன்று சாவகச்சேரி நீதிபதி திரு ஏ. வைத்திலிங்கம் முன்னிலையில் குற்றச்சாட்டுத் தாக்கல் செய்யப்பட்டது. மூவர் மீதும் காசிலிங்கசர்மாவை 1962-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 14-ந் திகதி கொலை செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இம் மாதம் 14-ம், 15-ம் திகதிகளில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவிருக்கிறது.

கோகிலாம்பாள் சார்பில் வழக்கறிஞர் எவரும் ஆஜராகவில்லை. முத்தர் வேலுப்பிள்ளை, ஆர். பசுபதி சார்பில் திரு. ரி. கணேசலிங்கம், திரு. ஆர். டீ. சிவகுரு, திரு. செல்லத்தம்பி ஆகியோர் அனுசரணையுடன் ஆஜரானுர். கிளிநொச்சி பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. பொன்னுத்துரை கோர்ட்டிற்கு வரவில்லை.

யாழ்ப்பாணத்திலிருந்து நேராக 'மோட்டார்' வானில் சரசாலை இரட்டைக் கொலை வழக்கு எதிரிகளுடன், கோகிலாம்பாள் சாவகச்சேரிகோர்ட்டிற்கு கொண்டுவரப்பட்டார்.

### கோர்ட்டில் ஜனத்திரள்

கோகிலாம்பாளைப் பார்ப்பதற்காக, அதிகாலை முதல் பெண்கள் உட்பட ஏராளமானோர் திரண்டிருந்தனர்.

மங்கல் நிறமான ஊதா நிறச் சேலையும் அதற்கேற்ற பச்சைச்சட்டையும், கோகிலாம்பாள் அணிந்திருந்தார். பவுண் நகைகளும் அணிந்திருந்தார்.

கொலைசெய்யப்பட்ட ஐய

(5-ம் பக்கம் பார்க்க)

## டெஸ்ட் கிரிக்கெட்

வெலிங்டன், மார்ச். 1

இங்கிலாந்திற்கும் நியூஸிலாந்திற்குமிடையே நடைபெறும் 2-வது கிரிகெட் டெஸ்ட் போட்டியில், நியூஸிலாந்து 194 ரன்கள் எடுத்து அவுட் ஆனது. இங்கிலாந்து ஒரு விக்கெட் நஷ்டத்திற்கு 74 ரன்கள் எடுத்தது.

## ORDER NISI

IN THE DISTRICT COURT OF KALMUNAI

No. 18/Testy

In the matter of the Intestate Estate of Vyramuttu Kanapathipillai of Koddaikallar

Deceased.

Seenithamby Sellathangam of Koddaikallar.

Petitioner

Vs.

1. Kanapathipillai Selva Selva Eswari and
2. Kanapathipillai Selva Eswaran both of Koddaikallar minors appearing by their Guardian-ad-Litem
3. Sinnathamby Seenithamby of Koddaikallar

Respondents.

This action coming on for disposal before K. C. E. de Alwis Esq. Addi District Judge of Kalmunai on the 1st day of February 1963 in the presence of Mr. N. Edwards, Proctor on the part of the petioner and the amended petition and affidavit of the petitioner abovenamed dated the 1st day of February 1963 having been read:

It is ordered that the 3rd respondent abovenamed be and he is hereby appointed as Guardian-ad-Litem over the minors the 1st and 2nd respondents abovenamed for all purposes of these proceedings, unless the respondent abovenamed or any other person or persons interested shall on or before the 15th day of March 1963 show sufficient cau to the satisfiction of this court to the contrary.

It is further ordered that the petitioner abovenamed be and she is hereby declared entitled as the widow of the deceased Vyramuttu Kanapathipillai to have letters of administration to the above estate issued to her accordingly unless the respondents abovenamed or any other person or persons interested shall on or before the 15th day of March 1963 show sufficient cause to the satisfaction of this court to the contrary.

(Sgd.) K. C. E. de Alwis
Addi District Judge

Kalmunai,
1st February 1963.

## அரசாங்க கேள்விப் பத்திரங்கள்

### நீர்ப்பாசனத் திணைக்களம்

என் 424-செங்கலடி உப-பிரிவிலுள்ள கித்துல்வெவ குளத்து வலது வாய்க்கால் கரையோரத்தில் ஸ்பில் கட்டுதல். கேள்விப்பத்திரங்கள் 26-3-63 வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

என் 445-மின்னேரி கந்தளாய் யோடஎல-கல்லோயா மட்டக்களப்பு இருப்புப் பாதை வழியிலிருந்துஇருப்புப்பாதை வழி பிறழ்தல். கேள்விப்பத்திரங்கள் 26-3-63 வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

### தபாற் தந்திப் பகுதி

என் 430-இரணைதீவு உப-தபாற்கந்தோருக்கும் பல்லவராயன்கட்டு உப-தபாற்கந்தோருக்கும் இடையில் இயந்திரத்தோணிகள், வள்ளங்கள் அல்லது வேறு எவ்வித வழியாலும் தபால் கொண்டு செல்வதற்கான ஒப்பந்தம். கேள்விப்பத்திரங்கள் 30-4-63 வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

இதன்முழுவிபரங்களுக்கும் 1-3-63 இல் வெளியான அரசாங்க வர்த்தமானியின் 1ம் பகுதி, 2ம் தொகுதியைப் பார்க்கவும். இதன் பிரதிகளை சகல கச்சேரிகளிலும், பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர்கள் கந்தோர்களிலும், தபாற் கந்தோர்களிலும், உப-தபாற் கந்தோர்களிலும், புகையிரத நிலையங்களிலும் பார்வையிடலாம்.

2-3-63

மாஸ்கோ, மார்ச். 1

நிலத்துக்கடியில் அணு ஆயுத பரிசோதனை நடத்துவது பாதுகாப்பானதென்று உத்தரவாதமளிக்க முடியாதென்றும் அந்தப் பரீட்சைகளினல் கூட மனிதவர்க்கம் பாதிக்கப்படுமென்றும் சோவியத் விஞ்ஞானி ஒருவர் தெரிவித்தார்.

# புகையிரத சேவைபற்றி விசாரணைக்கமிஷன் வேண்டும்

## பிரயாணிகள் சம்மேளனம் கோரிக்கை

கொழும்பு, வெள்ளி

இலங்கை அரசாங்க புகையிரதப் பகுதியினரின் வேலை சம்பந்தமாக விசாரணை நடத்தும்படி, அகில இலங்கை பொதுமக்கள் போக்குவரத்து சம்மேளனத்தின் பொதுக்காரியதரிசி போக்குவரத்து மராமத்து அமைச்சருக்கு மகஜர் ஒன்று சமர்ப்பித்துள்ளார்.

இதுசம்பந்தமாக பொதுக்காரியதரிசி தெரிவிக்கையில், புகையிரதப்பகுதியில் நிலவும் நிர்வாக சீர்கேடுகள் குறித்து விசாரணை செய்யும் பொருட்டு விசாரணைக் கமிஷன் ஒன்றை நீண்டகாலமாக நியமிக்கப்படாமலிருந்து வருவதாகக் கூறினர்.

போக்குவரத்து, மராமத்து மந்திரி திரு. பி. பி. ஜி. கலுகல்லவுக்கு போக்குவரத்து சம்மேளனம் சமர்ப்பித்துள்ள மகஜரில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

1. விசாரணைக்கமிஷன் ஒன்றை நியமிப்பதற்குப் பதிலாகத் தொழிற்சங்கப் பிரதிநிதிகளைக் கொண்ட ஆலோசகசபையொன்று நியமிக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது. விசாரணைக்கமிஷன் சட்டத்தின்கீழ் ஒரு விசாரணைக் கமிஷனை நியமிக்கும்படி கவர்னர் ஜெனரலிடம் சிபார்சு செய்யும்படி நாங்கள் உங்களைக் கேட்டுக்கொள்கின்றோம்.

நாங்கள் கோரும் விசாரணைக் கமிஷனுக்கு இந்திய புகையிரத நிபுணர் ஒருவர் தலைவராகவிருக்க வேண்டும்:

2. போக்குவரத்து அமைச்சைச் சேர்ந்த பிரதிநிதியொருவர் விசாரணைக் கமிஷனில் இருக்க வேண்டும்.

3. தேசிய சேவைகள் அமைச்சைச் சேர்ந்த பிரதிநிதியொருவர் கமிஷனில் இருக்க வேண்டும்.

4. இலங்கைப் போக்குவரத்துச்சபையின் அங்கத்தவர் ஒருவர் கமிஷனில் இருக்க வேண்டும்.

5. அகில இலங்கை பொதுமக்கள் போக்குவரத்து பிரயாணிகள் சம்மேளனத்தின் பிரதிநிதியொருவர் விசாரணை கமிஷனில் அங்கத்துவம் வகிக்க வேண்டும்.

6. மந்திரி விரும்பக்கூடிய தகுதியான ஒருவர் அதாவது புகையிரத தொழிற்சங்கமொன்றினைச் சேர்ந்த ஒருவர் விசாரணைக் கமிஷனில் இருக்க வேண்டும்.

## வரி விளம்பரம்

### பயிற்சி

அச்சுக் கோர்க்கும் (Compositor) கலையில் பயிற்சிபெற விரும்பும் எஸ். எஸ். சி. சித்தியடைந்த இளைஞர்கள் பெட்டி இல. 736. c/o ஈழநாடு என்ற விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும்.

### வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு 1/2 மைல் சுற்றுவட்டாரத்துக்குள் இரு குடும்பங்கள் வசதியாக வசிக்கக்கூடிய வீடு வாடகைக்கு உண்டு. வாடகை ரூபா 80/-விபரங்களுக்கு:-

சபாரத்தினம்,
15/1, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

### விற்பனைக்கு

முந்திரிகை கன்றுகள் (Red Variety) உயர்தர சிகப்பு இன இனிப்புப், பழரக, கன்றுகள். ஒன்றின் விலை 5 ரூபாய். இ. கிருஷ்ணசாமி, திருநெல்வேலி ஸ்ரோர்ஸ், திருநெல்வேலி.

738

### தொய்வு; நீரிழிவு

குணப்படுத்த உத்தரவாதம் மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனம். தொய்வுக்கு 10 நாள் மருந்து 12/50 நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50.

வைத்தியர் பரிபூரணாநந்தர் கைலாயபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

# தேசிய எதிர்ப்பு சக்திகள்

## விழிப்புடன் இருக்கின்றன

களுத்துறை, வெள்ளி

'எமது சமயத்தையும், கலாசாரத்தையும், மொழியையும் 400 ஆண்டுகளாக வெளிநாட்டு ஏகாதிபத்தியவாதிகள் நசுக்கி சிதைத்து வந்தார்கள். இன்னும் இத்தகைய ஏகாதிபத்தியவாதிகளும் தேசிய எதிர்ப்புச் சக்திகளும் விழிப்புடன்தான் இருக்கிறார்கள்'

இவ்வாறு திரு. எல். எச். மெத்தானந்தா அபினவரமயா, குடலிகாமா, நிபோடாவிலுள்ள ஞாயிறு பாடசாலை ஒன்றின் வருடாந்த பரிசளிப்பு விழாவில் பேசுகையில் கூறினார்.

திரு. மெத்தானந்தா மேலும் பேசுகையில் கூறியதாவது:

இலங்கையிலுள்ள சிலகுறிப்பிட்ட வெளிநாட்டுக் கம்பெனிகளில் பௌத்த சமயிகள் வேலை தேடிச் செல்லும்போது அங்கு பாகுபாடு காட்டப்படுகிறது. இவ்வித கம்பெனிகள் உடனே தேசியமயமாக்கப்பட வேண்டும்.

தேசிய எதிர்ப்புச் சக்திகளும் பிற்போக்குச் சக்திகளும் இங்கு விழிப்பாக இருப்பதால் எம்மில் சிலர் அரசாங்க சேவையுள் தேசிய பௌத்த சோஷலிச முன்னணி ஒன்றை ஆரம்பித்து நாட்டை எதிர்ப்புச் சக்திகளிடமிருந்து காப்பாற்றத் தீர்மானித்துள்ளோம்.

ஆசிரியருக்குக் கடிதங்கள்

# தேசிய ஒற்றுமைக்கு வழியா?

ஈழநாடு 21-2-63 இதழில் ஆசிரியருக்குக் கடிதம் என்ற பகுதியில் தேசிய ஒற்றுமை என்ற தலைப்பில் திரு. ஜே.பி. அரியநாயகம் அவர்கள் இலங்கை வாழ் தமிழ் மக்களுக்கு மிக அரிய யோசனைகளை தமது கடிதத்தில் குறிப்பிட்டிருந்தது வரவேற்கத்தக்கது.

ஆசியாக் கண்டத்திலே சமீபகாலத்தில் உதித்த சுதந்திர சூரியன் எமது சிறுநாடான இலங்கையிலும் தனது பிரபைக்கதிர்களை பரவத் தவறவில்லை.

1948-ம் ஆண்டு பெப்ரவரி 4-ம் நாள் இலங்கை பெற்ற சுதந்திரத்தின் முதலாவது தேசியஅரசாங்கமாக அமைத்த ஐக்கிய தேசியக்கட்சி (யூ. என். பி.) அரசாங்கம் 1949-ம் ஆண்டு பாராளுமன்றத்தில் நிறைவேற்றிய பிரஜாஉரிமை மசோதா மலையகத்தில் வாழும் 10 இலட்சம் தமிழ் மக்களை இந்நாட்டின் அகதிகளாக, அனதைகளாக, நாடற்றவர்களாகச் செய்தது. இது தேசிய ஒற்றுமையை விரும்பியா? அல்லது தனிச் சிங்கள ஆட்சியை விரும்பியா? இதில் யார் தேசியஒற்றுமையைக் குலைத்தார்கள்? மலையக மக்களை நாடற்றவர்களாக கொண்டுவந்த பிரஜா உரிமை மசோதாவே இலங்கை வாழ் தமிழ்-சிங்கள மக்களின் ஒற்றுமையைக் கூறுபோட்ட முதலாவது அடியாகும்.

தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசமாக விளங்கும் வடகிழக்கு மாகாணங்களில் சிங்களக் குடியேற்றத்தின் மூலம் தமிழப் பிரதேசங்களை ஆக்கிரமிப்பு செய்தது தேசிய ஒற்றுமையை குலைப்பதற்கு சிங்கள அரசாங்கம் கொடுத்த இரண்டாவது அடியாகும்.

1954-ம் ஆண்டு சேர் ஜோன் கொத்தலாவலை தலைமையில் உருவான அரசாங்கத்துடன் ஒத்துழைத்த தமிழர் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்தை அராசாங்கத்தைவிட்டு வெளியேற்றியது தேசிய ஒற்றுமையை குலைத்த மூன்றாது அடி.

1956-ம் ஆண்டு, காலஞ்சென்ற திரு. எஸ்.டபிள்யூ.ஆர். டி.பண்டாரநாயகா தலைமையில் அமைந்த மக்கள் ஐக்கியமுன்னணி (எம். ஈ. பி.) ஆட்சிப் பீடம் ஏறியதும் தனது முதல் வேலைத்திட்டமாக 1956-ம் ஆண்டு ஜூன் மாதம் 5-ம் திகதி தனிச் சிங்களச்சட்டத்தைக் கொண்டுவந்து நிறைவேற்றி சகல தமிழ் பேசும் மக்களையும் அடிமைப்படுத்தியது நாலாவது அடி.

தனிச் சிங்களச் சட்டத்தை எதிர்த்து பாராளுமன்றத்திற்குள்ளேயும் வெளியேயும் கிளர்ச்சி செய்த தமிழ்பேசும் மக்களின் எதிர்ப்பை கண்டு தமிழ் மக்களின் மிகப்பெரிய பிரதிநிதித்துவ ஸ்தாபனமான தமிழ் அரசுக் கட்சியுடன் 1957-ம் ஆண்டு ஜூலை மாதம் செய்துகொண்ட ஒப்பந்தத்தை பிரதமர் பண்டாரநாயக்கா கிழித்தெறிந்தது தமிழ் பேசும் மக்களின் ஒற்றுமையை நாடியா?

1958-ம் ஆண்டு மே—ஜூன் மாதத்தில் நடைபெற்ற இனக் கலவரத்தால் தமிழ் மக்கள் எக்கதிக்குள்ளானர்கள் என்பதை உலகமே அறியும்.

1960 ஏப்ரலில் ஆட்சிக்கு வந்த திரு. டட்லி சேனநாயக்கா தலைமையிலுள்ள ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் தமிழ் மக்களின் கோரிக்கையை அடியோடு நிராகரித்தது.

1960 ஜூலையில் ஆட்சிக்கு வந்த சிறிமாவின் தலைமையில் உள்ள சுதந்திரக்கட்சி (எஸ். எல். எப். பி.) அரசாங்கம் தமிழரசுக் கட்சிக்கு கொடுத்த வாக்குறுதியையே காற்றில் பறக்கவிட்டது தேச கௌரவத்தையும் தேச ஒற்றுமையையும் விரும்பியா? அல்லது தனிச் சிங்கள ஆட்சியை நிலைநாட்டவா?

அடுத்ததாக கட்சிகளின் ஒற்றுமையையும் குறிப்பாக திரு. செல்வநாயகம், திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் ஆகியோரின் ஒற்றுமையையும் கடிதத்தில் வலியுறுத்தி இருப்பது மகிழ்ச்சிக்குரியது.

1957-ம் ஆண்டு திரு. பண்டாரநாயக்கா — செல்வாநாயகம் ஒப்பந்தம் ஏற்பட்டபொழுது ஐக்கிய தேசியக் கட்சி, சமசமாஜக் கட்சி, கொம்யூனிஸ்ட்கட்சிகள் தமிழருக்கு சிங்கள இனத்தை திரு. பண்டாரநாயக்கா விற்றுவிட்டார் என்று சொல்லி சிங்கள நாடுபூராவும் சென்று பிரசாரம் செய்து சிங்களமக்களின் வெறுப்பை தமிழ் மக்கள்மீது தூண்டிவிட்டது தேசிய ஒற்றுமையை விரும்பியா?

அதே நேரத்தில் திரு ஜி.ஜி பொபன்னம்பலம் தமிழ் பிரதேசங்களில் தமிழ்மக்களை திரு. செல்வநாயகம் சிங்களவருக்கு அடிமையாக்கி விட்டார் என்று பிரசாரம் செய்தது தமிழ் மக்களின் ஒற்றுமையை விரும்பியா?

சென்ற பொதுத்தேர்தலில் தமிழ்க்காங்கிரஸ்பலதொகுதிகளில் தமிழரசுக்கட்சியுடன் போட்டியிட்டு உடுப்பிட்டித் தொகுதியில் மட்டும் வெற்றி பெற்றது. தமிழ்க்காங்கிரஸ் அங்கத்தவர் திரு. மு. சிவசிதம்பரம் தற்பொழுது தமிழரசுக்கட்சியுடன் ஒன்ருக இயங்குவதையும் செயல்படுவதையும் காணவில்லையா?

தமிழரசுத் தந்தை செல்வநாயகத்துடன் தனி ஒரு வழக்கறிஞர் ஜி. ஜி பொன்னம்பலத்தை ஒப்பிட்டு ஒற்றுமைப்படுங்கள் என்று திரு. அரியநாயகம் பொதுப்படையாகக் கூறுவது மனஸ்தாபத்துக்குரியது.

ஆசீர்வாதம் ஹென்றி
சுன்னுகம்

# 'மரக்கறிக்கு உத்தரவாத விலைவேண்டும்'

—ராஜரத்ன

வெலிமடை, வெள்ளி

"ஊவா மாகாணத்திலுள்ள பெரும்பாலான மக்கள், பயிர்ச்செய்கையில் தான் ஈடுபட்டுள்ளார்கள். ஆனல் அவர்கள் உற்பத்திசெய்யும் மரக்கறிகளுக்கு ஒரு உத்தரவாத விலையை அரசாங்கம் அளிக்காதது வருந்தத்தக்கதோர் செயலாகும்." என்று ஹெலடிவ கோலி பெரமுனை ஆதரவின்கீழ்,வெலிமடை பட்டினசபையில் நடைபெற்ற கூட்டமொன்றில் ஜாதிக விமுக்தி பெரமுனை தலைவர் திரு. கே. எம். பி. ராஜரத்ன பேசுகையில் கூறினர்.

திரு. ராஜரத்ன தொடர்ந்து பேசுகையில் 1948-ம் ஆண்டில் இலங்கை சுதந்திரம் பெற்றதாகக் கூறப்படினும், இந்த நாடு இன்றும் பொருளாதார சுபிட்சமடையவில்லையென்று கூறினர்.

அவர் மேலும் கூறியதாவது: "ஒரு சிறிய நாடாகவிருக்கும் கியூபா, பொருளாதார சுபிட்சமடைந்திருக்கிறதுடன், அங்குள்ள எல்லா மக்களும் நல்ல வசதிகளுடன் வாழ்கிறார்கள்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை முறியடித்து, உண்மையான ஒரு தொழிலாளர் ஆட்சியை நிறுவமக்கள் முன்வர வேண்டும்."

கியூபாவைச் சேர்ந்த விவசாயியான திரு. அல்பேர்ட் லீவிஸ் என்பவரும் கூட்டத்துக்குச் சமுகமளித்திருந்தார்.

திரு. அல்பேர்ட் லீவிஸ் பேசுகையில், தங்களுக்கு நேர்ந்த துன்பங்களையெல்லாம் நன்குணர்ந்த கியூபா மக்கள், பெடல் காஸ்ட்ரோ தலைமையில் ஒரு ஒற்றுமையான நாட்டை உருவாக்கியுள்ளனர் என்றும் நிலமில்லாதவர்களுக்கு, பிடல் காஸ்ட்ரோ நிலமளித்திருக்கிறார் என்றும் கூறினர்.

கியூபாவில், நிலமில்லாத மக்கள் இல்லையென்றுதான் சொல்லலாம். ஒரு தனி நபர் 50 ஏக்கர் காணிக்குமேல் வைத்திருக்கக் கூடாதென்றும் அப்படி வைத்திருந்தால் அது ஒரு குற்றமாகுமென்றும் அங்கு சட்டம் இயற்றப்பட்டுள்ளது. என்றும் அவர் கூறினர்.

## இன்று

வண்ணார்பண்ணை நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலைத் தலைமையாசிரியர் வித்துவான் இ. திருநாவுக்கரசு இன்றிரவு 9-15 மணிக்கு திருச்செந்தூர்க் கலம்பகம் என்னும் பொருள்பற்றி இலங்கை வானெலி தேசிய ஒலிபரப்பில் பேசுகிறார்.

## வேலைநிறுத்தம்

ஹட்டன், வெள்ளி

விங்டன் தோட்டத்தைச் சேர்ந்த சுமார் 320 தொழிலாளர்கள் நேற்று வேலைநிறுத்தம் செய்தனர்.

# முன்னாள் இந்திய ஜனாதிபதி ராஜன்பாபு பாட்னாவில் காலமானார்

## நாடுமுழுவதும் துக்கம்; தலைவர்கள், மக்கள் கவலை

பாட்னா, மார்ச் 1

**இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதியும் மகாத்மா காந்திஜியின் நெருங்கிய நண்பருமான டாக்டர் ராஜேந்திரபிரசாத் நேற்றிரவு காலமானார். நேற்று மாலை பாட்னா பல்கலைக்கழகப் பட்டமளிப்புவிழாவில் உரைநிகழ்த்தவிருந்த டாக்டர் பிரசாத் நேற்றுக் காலை திடீரென நோய்வாய்ப்பட்டார். நேற்றிரவு காலமானார். அவரது ஆவி பிரியும்போது அவரது குடும்பத்தினர் அருகிலிருந்தனர்**

ராஜன்பாபுவின் மரணச் செய்தி ஒருசில நிமிஷங்களிலேயே காட்டுத் தீபோல் பாட்னா முழுவதும் பரவியது. செய்தி அறிந்ததும் பீகார் கவர்னர் அனந்தசயனம் ஐயங்கார், முதன்மந்திரி விநோதானந்தஜா ஆகியோரும் காட்மாண்டுச்குச் செல்லும் வழியில் பாட்னாவுக்கு வந்திருந்த இந்திய உள்விவகாரமந்திரி திரு. லால்பகதூர்சாஸ்திரியும் ராஜன்பாபுவின் ஆசிரமத்துக்கு விரைந்து சென்றனர். பெருந் தொகையான மக்களும் அங்கு திரண்டனர்.

**காரியாலயங்கள் மூடப்பட்டன**

ராஜன்பாபுவின் இறுதிச் சடங்குகள் இன்று நடைபெறுகின்றன. மரணச்செய்தி கிடைத்ததும் அரசாங்கக் காரியாலயங்கள் யாவும் மூடப்பட்டன. இன்று அரசாங்க காரியாலயங்கள் யாவும் மூடப்பட்டிருக்கும். காரியாலயக்கட்டிடங்களில் தேசியக் கொடி அரைக் கம்பத்தில் பறக்கவிடப்பட்டுள்ளன. ஒருவாரத்துக்கு நாடு துக்கமனுஷ்டிக்குமென அரசாங்க அறிக்கையொன்று கூறுகிறது.

அரசாங்க பொதுக் கொண்டாட்ட வைபவங்கள், நிகழ்ச்சிகள் யாவும் ரத்துச் செய்யப்பட்டுவிட்டன.

## ராஷ்டிரபதி, பிரதமர், ராஜாஜி இரங்கல் செய்தி

புதுடில்லி, மார்ச் 1

டாக்டர் ராஜேந்திரப்பிரசாத்தின் மரணச் செய்தி தெரிவிக்கப்பட்டதும் ராஷ்டிரபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் பின்வருமாறு கூறினர்.

இது பேரதிர்ச்சி தரும் செய்தி. தன்னலமற்ற பெரும் தொண்டர் ராஜன்பாபு. அவரது மறைவு பெருநஷ்டம். நாட்டுக்கு அவர் செய்த தியாகம் அவரை என்றும் நினைவில் வைத்திருக்கும்.

உபராஷ்டிரபதி டாக்டர் ஸாகிர் ஹுசைனின் மரணச் செய்தி கேட்டதும் மனிதப் பண்புள்ள ஒருகனவானை நாடு இழந்தது பெருநஷ்டம் என்றார்.

ராஜன்பாபு காலமான செய்தி கேட்ட பிரதமர் நேரு பின்வருமாறு கூறினர்:

நாட்டின் முன்னேற்றத்தில் நெருங்கிய பங்கு கொண்ட பெருந் தலைவர்களில் ஒருவர் மறைந்துவிட்டார். தீரமுடன் நாட்டை வழிநடத்திச் சென்றவர் அவர். அவரது நினைவு என்றும் நிலைத்து நிற்கும்.

**ராஜாஜி அனுதாபம்**

"ராஜன்பாபுவின் மறைவு இந்த நாட்டிற்கு நேர்ந்த பெரும் துரதிருஷ்டம் காந்திஜியின் மரணச் செய்திக்குப்பின் கிடைத்த மற்றொரு பெரும் துக்ககரமான செய்தி இது" என்று சுதந்திர இந்தியாவின் முதல் கவர்னர் ஜெனரல் சக்ரவர்த்தி ஸி. ராஜகோபாலாச்சாரியார் தெரிவித்தார்.

## பிரிட்டனில் தேடுகின்றனர்

லண்டன், மார்ச் 1

டிகோலுக்கு எதிரான இரகசிய ராணுவ ஸ்தாபனத் தலைவர் ஜோர்ஜஸ்பிடோல்ட்டை பிரிட்டிஷ் பொலிசாரும் பாதுகாப்பு அதிகாரிகளும் பிரிட்டனில் தேடிவருவதாக லண்டன் பத்திரிகையொன்று நேற்று செய்தியொன்றை வெளியிட்டது.

## மலேசியா அமைப்பு

### யுதாண்ட் நிலை

நியூயோர்க், மார்ச் 1

மலேசியா அமைப்பு சம்பந்தமாகத் தோன்றியுள்ள நிலைமையில் ஐ. நா. தலைமைக் காரியதரிசி யுதாண்ட் 'பொறுத்திருந்து பார்க்கும் கொள்கையைக்' கடைப்பிடிப்பாரென்று தெரிகிறது.

மலேசியா சம்பந்தமாக சம்பந்தப்பட்ட நாடுகளுடன் யுதாண்ட் தொடர்பு கொண்டுள்ளதாக ஐ. நா. உதவித் தலைமைக் காரியதரிசி திரு. சி. வி. நரசிம்மன் தெரிவித்தார். மலேசியா அமைப்பு சம்பந்தமாக நிலைமை மோசமானதாகவே உள்ளதென்று திரு. நரசிம்மன் தெரிவித்தார்.

## ஐ. நா. வுக்கு யேமன்புகார்

சனா, மார்ச் 1

யேமன் குடியரசு எல்லைப் பகுதிக்குள் பிரிட்டிஷ் விமானங்கள் அத்துமீறிப் பிரவேசித்துத் துண்டுப்பிரசுரங்கள் வீசிவருவதாகவும் இது யேமன் குடியரசின் பிரதேச உரிமையை மீறுவதுடன் ஐ. நா. சாசனத்துக்கும் விரோதமானதென்றும் இந்த நடவடிக்கை உலக சமாதானத்துக்கு ஆபத்தானதென்றும் யேமன் குடியரசு அதிபர் ஐனப் சலால் ஐ. நா. பாதுகாப்புச்சபைக்குப் புகார் செய்துள்ளார்,

## இடமாற்றம்

வட்டுக்கோட்டை, வெள்ளி

பொன்னாலை வரதராசப் பெருமாள் 'தமிழ் வித்தியாசாலை ஆசிரியர் பண்டிதர் திரு. த. சுப்பிரமணியம் இன்று தொடக்கம் வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரியில் தமிழ் பண்டிதராகக் கடமையாற்றுவார்

## இந்தியச் செய்திகள்

### 'சரியே!'

புதுடில்லி, மார்ச் 1

'அண்மையில் மோஷியில் நடைபெற்ற ஆசிய–ஆபிரிக்க மகாநாட்டில் கலந்துகொள்ள இந்திய தூதுகோஷ்டிக்கு உரிமை அளித்தது சரியே' என்று பாரதப் பிரதமர் நேரு தெரிவித்துள்ளார். பெரிய தூதுகோஷ்டியுடன் மகாநாட்டுக்குச் சீனா சென்றதாகவும், ரஷ்ய பிரதிநிதிகளைக்கூட அவர்கள் ஆட்சேபித்ததாகவும் காங்கிரஸ் கட்சி நிர்வாகக் கமிட்டியில் அவர் கூறினார்.

∴ ∴ ∴

### பெனிசிலின் ஊசியால் மரணம்

இந்தூர், மார்ச் 1

பெனிசிலின் ஊசி ஒன்றை போட்டுக்கொண்ட பின்னர் 35 வயதுள்ள ஒரு நபர் இங்குள்ள ஆஸ்பத்திரி ஒன்றில் மரணமானார்.

∴ ∴ ∴

### பொற்கொல்லர் ஊர்வலம்

வேலூர், மார்ச் 1

வேலூரிலுள்ள சுமார் 2,000 கொல்லர்கள், நகரின் முக்கிய வீதிகளின் வழியாக ஊர்வலமாகச் சென்றனர். புதிய வேலைகளைத் தரலாம் என்றும், பிரதானமாக என்சினியரிங் தொழில்களில் வேலை தருமாறும் கோரும் அட்டைகளைத் தாங்கிச் சென்றனர்.

∴ ∴ ∴

### விடுதலை

வேலூர், மார்ச் 1

திராவிட முன்னேற்றக் கழகம் மறியல் சம்பந்தமான வழக்கில் ஈடுபட்ட ஆறுபேரை வேலூர் அடிஷனல் முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட் விடுதலை செய்தார். மாஜிஸ்டிரேட் விடுதலை செய்யும் தி. மு. க. வினரின் கடைசிக் கோஷ்டி இது

∴ ∴ ∴

### குழந்தையின் பிரயாணம்

பம்பாய், மார்ச் 1

பெற்றோரின்றி இரண்டரை வயதுள்ள ஒரு குழந்தை தனியாக டில்லியிலிருந்து ஹாங்ஹாங்குக்கு விமானத்தில் பிரயாணம் செய்த சம்பவமொன்று நிகழ்ந்துள்ளது. அக் குழந்தையுடன் துணையாக விமான உபசரிணி மட்டும் சென்றார்.

∴ ∴ ∴

### மாணவிகளுக்கு!

சென்னை, மார்ச் 1

பல்கலைக் கழக மாணவிகளுக்காக தாம்பரம் க்ஷயரோக சிகிச்சை ஆஸ்பத்திரியில் தனியாக வார்ட்டுகளையும், சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரியில் மாணவிகளுக்காக ஒரு வார்ட்டையும் அமைக்க உலக பல்கலைக் கழக ஸ்தாபனம் ஒழுங்குகள் மேற்கொண்டுள்ளது.

## மண்ணெண்ணெய், சிகரட் விலை உயர்வு

### இந்திய நிதிமந்திரியின் புதிய வரிகள்

புதுடில்லி, மார்ச். 1

**இந்தியாவின் 1963-64-ம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டத்தை நிதிமந்திரி மொரார்ஜிதேசாய் நேற்று லோகசபையில் சமர்ப்பித்தார். இந்த வரவுசெலவுத் திட்டத்தின்படி 867 கோடி ரூபா பாதுகாப்புக்குச் செலவிடப்படும். பாதுகாப்புக்கு நடப்பு ஆண்டில் ஒதுக்கிய தொகையைவிட இது 362 கோடி ரூபாய் அதிகமாகும்.**

வரவுசெலவுத் திட்டத்தில் துண்டுவிழும் தொகையைச் சரிக்கட்டுவதற்குப் புதிய வரி விகிதங்களையும் நிதிமந்திரி அறிவித்தார். புதிய வரி விதிப்புக்களில் கம்பெனிகளுக்கு வருமானவரி முதலியவைகள் போக மிஞ்சும் லாபப்பணத்துக்கு உபரிலாபவரி என்று புதிய வரி ஒன்று கொண்டு வரப்பட்டுள்ளது.

புதிய வரி முறைகளைவைத்துக் கொள்ளைலாபம் அடிப்பவர்களுக்கு இந்திய பாதுகாப்புச் சட்டவிதிகளின்கீழ் தண்டனை விதிக்கப்படுமென்றும் நிதிமந்திரி தெரிவித்தார்.

**ஆடம்பரப் பொருள்களுக்கு வரி**

ஆடம்பரப்பொருள்களின் மீதே வரி விதிக்கப்பட்டுள்ளதாகவும் அத்தியாவசியப் பொருள்கள்மீது வரி விதிக்கப்படவில்லை யென்றும் நிதிமந்திரி மொரார்ஜிதேசாய் அறிவித்தார்.

சீனி, தீப்பெட்டி, காலனிகளுக்கு வரிவிதிக்கப்படவில்லை சிகரட் மீது அந்தந்த சிகரட்டுகளின் விலைகளைப்பொறுத்து வரிவிதிக்கப்பட்டுள்ளது. குறைந்தவிலை சிகரட்டுகளுக்கு ஆயிரத்துக்கு 70 நயாபைசாவும் உயர்ந்தவிலை சிகரட்டுகளுக்கு ஆயிரத்துக்கு 8ரூபாய் 70 நயாபைசா வரியும் விதிக்கப்பட்டுள்ளது.

புதிய 'எக்சைஸ்' வரியில்லை. ஆனால் 'சர்சார்ஜ்' மேலதிக வரியுண்டு.

ரேடியோசெட், ரேடியோகிராம், அச்சடிக்கும், எழுதும் காகிதம், சணல், மின்சாரசாதனங்கள் சில ஆகியவைகளுக்கு வரி விதிக்கப்பட்டுள்ளன.

**மண்ணெண்ணெய்மீது வரி**

மண்ணெண்ணெய்க்கு வரி விதிக்கப்பட்டுள்ளது. ஒரு போத்தல் மண்ணெண்ணெயின் விலை இப்போதுள்ள விலையிலிருந்து ஏழு நயாபைசா அதிகமாகும். மண்ணெண்ணெய் விலையால்சாதாரண பொதுமக்கள் பாதிக்கப்படுவார்களாதலால் தாவர எண்ணெய்கள் மீது இதுவரை இருந்துவந்த வரி நீக்கப்பட்டுவிட்டது.

தபால் அட்டைகளின் விலை 5 நயாபைசாவிலிருந்து 6 நயாபைசாவாகவும் மற்றும் தந்தி, பார்சல் கட்டணங்களும் உயர்த்தப்பட்டுள்ளது.

இலங்கை இந்தியர்

## வட்டமேசை மகாநாட்டில் எங்களையும் அனுமதியுங்கள்

### அரசாங்கத்துக்கு தொழிலாளர் காங்கிரஸ் கோரிக்கை

கொழும்பு, வெள்ளி

இலங்கை—இந்திய பிரச்னையைச் சுமுகமாகத் தீர்த்துவைக்கும்பொருட்டு கூட்டப்படவிருக்கும் வட்டமேசை மகாநாட்டில் கலந்துகொள்வதற்குத் தங்களுக்கும் அனுமதியளிக்கும்படி இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் அரசாங்கத்தைக் கேட்டுள்ளது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸைச் சேர்ந்த அதிகாரியொருவர் இது சம்பந்தமாகத் தெரிவிக்கையில், இலங்கை இந்தியர் பிரச்னை சம்பந்தமாக ஆராயும்பொருட்டு விரைவில் ஒரு வட்டமேசை மகாநாடு நடைபெறவிருக்கிறதென்றும், இந்த மகாநாட்டில் அரசாங்க, எதிர்க்கட்சித் தலைவர்களும் மற்றும் சிலரும் கலந்துகொள்வார்களென்றும், இந்த மகாநாட்டில் பிரஜா உரிமை உட்பட பல விஷயங்கள் ஆராயப்படுமென்றும் கூறினார்.

இது சம்பந்தமாக வட்டமேசை மகாநாட்டில் மகஜர் ஒன்றைசமர்ப்பிக்க இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஆயத்தம் செய்வதாகத் தெரியவருகிறது. இந்த மகஜரைத் தயாரிக்கும்பொருட்டு, சமூக அடிப்படையிலும், சட்ட நோக்கிலும் நாடற்றவர் பிரஜாவுரிமை சம்பந்தமாக காங்கிரஸ் இப்பொழுது ஆராய்ந்துவருகிறது.

இதுசம்பந்தமாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரசைச் சேர்ந்த மற்றுமொரு அதிகாரி தெரிவிக்கையில், இந்தியமக்கள் சார்பாக காங்கிரஸ்தனது நிலைமையைத் தெரிவிக்க விரும்புகிறதென்றும் இப் பிரச்னையைத் தீர்த்துவைப்பதற்கான சில யோசனைகளை அரசாங்கத்துக்குக் கூறவிரும்புகிறதென்றும் கூறினர்.

## தேசிய சீனாவின் வலிமை

தைப்பே, மார்ச். 1

"கம்யூனிஸ்ட் சீனமீது தாக்குதல் நடத்தி அதை மீண்டும் எடுத்துக்கொள்ளக்கூடிய படை வலிமை சியாங்கை ஷேக்கின் தேசிய சீனாவுக்கு இருக்கிறது" என்று தேசிய சீன பாதுகாப்பு அமைச்சின் பகுதி டைரக்டர் யாங்வே தெரிவித்தார்.

800,000 வீரர்களைப் படைக்குத் திரட்டக்கூடிய ஆற்றலிருக்கிறதென்றும் இந்த வலிமையைக்கொண்டு கம்யூனிஸ்ட் சீனரைத் தோற்கடிக்க முடியுமென்றும் கூறிய யாங்வே அதற்கு விளக்கமும் கூறினர்.

## மணி வாக்கு

மக்கள் குலமனைத்தும் ஒன்றே. எல்லோரும் நண்பர்கள். இப்படிக் கருதி நடப்பதே பொன்னான வழி. தன்மதத்தைச் சேர்ந்தவரையும், பிற மதத்தைச் சேர்ந்தவரையும் வெவ்வேறாக மதிப்பவர் துவேஷத்துக்கும், மதங்களின் அழிவுக்கும் வழி வகுப்பவராவர்.

— மகாத்மாகாந்தி

ஈழநாடு

EELANADU National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம் சுபகிருது ஆண்டு மாசி மீ 18 உ (2-3-63)

## ராஜன்பாபு

சுதந்திர இந்தியக் குடியரசின் முதல் ஜனாதிபதியான டாக்டர் ராஜேந்திரப்பிரசாத்தின் மறைவைக் கேட்க நம்மைப்போல் இங்கு பலரும் துக்கமடைவர். அவர் ஜனாதிபதியாக இருக்கையில் நம் யாழ்ப்பாணத்துக்கும் விஜயம் செய்தார். அப்போது இங்கு பல்லாயிரக்கணக்கான மக்கள் அவரைத் தரிசிக்கக் கூடிய இருந்த காட்சிகளெல்லாம் நமக்கு ஞாபகம் வருகின்றன. சரித்திரத்தில் பதியத்தக்க அந்த விஜயத்தின்போது அவருக்கு இங்கு அளிக்கப்பட்ட வரவேற்பு அவர்பால் நம்மக்களுக்குள்ள பெருமதிப்புக்கும் அன்புக்கும் அத்தாட்சியாகும். அவ்வித ஒரு நல்ல மனிதர், பெரியமனிதர், பாரத ரத்தினம் மறைந்ததைக்கேட்க இங்கு நமக்கே பெருந் துக்கமாக இருக்கையில், இந்திய மக்களுக்கு எப்படி இருக்குமென்பதை விளக்கத் தேவையில்லை. அவர்களுக்கு நமது மனப்பூர்வமான அனுதாபங்கள்.

ராஜாஜி கூறுவதுபோல், இந்தியாவிலே மகாத்மாகாந்திக்கு அடுத்தபடியாக இருந்தவர் ராஜன்பாபுதான். சுதந்திர இந்தியக் குடியரசுக்கு முதல் ஜனாதிபதியாக யாரைத் தெரிவு செய்வதென்ற கேள்வி எழுந்தபோது, ராஜன்பாபுவுக்கே அமோகமான ஆதரவு இருந்தது. அப்பெரிய பதவியை அவர் மிகக் கண்யமாக பத்து ஆண்டுகள் மிகவெற்றிகரமாகவும் உலகநாடுகளின் மதிப்பைப் பெறத் தக்கவகையிலும் வகித்துத் தொண்டாற்றி மற்றவர்களுக்கும் வழிகாட்டியாக இருந்தார். அவ்வளவு பெரிய மாளிகையிலே வசித்து, 46 கோடி மக்களின் தலைவராக இருந்தும் மிக எளிமையாக அவர் வாழ்க்கை நடத்தியது, முன்காலத்திலே பற்றற்று வாழ்ந்த ஜனக மகாராஜன் போன்றவர்களை ஞாபகமூட்டுவதாக இருந்தது.

மகாத்மாவின் தலைமையிலே நாட்டின் விடுதலைக்காக தமது வாழ்க்கையையேஅவரிடம் ஒப்புவித்தபெரியதியாகிஅவர்.பன்முறை சிறைசென்ற அஹிம்சாவீரர், பீகாரிலே எளிய மக்களின் உற்ற துணைவர். மகாத்மாவின் வார்த்தையை இம்மியும் பிசகாமல் நிறைவேற்றிய உத்தமத் தொண்டர், அரசியல்ஞானி, கல்விமான், சரித்திராசிரியர், மேலான இலட்சியவாதி, சமூக சீர்திருத்தக்காரர். ஆக்கமுறையிலே நாட்டின் மேலான நன்மைக்காக சதா சிந்தித்து கடைசி மூச்சுவரை உழைத்த உத்தமப் பெரியார் அவர்.

பதவியிலிருந்து விலகியதும் சர்வோதய இயக்கத்தில் அவர் சேர்ந்ததுடன் தமது ஆஸ்தியையெல்லாம் பூதானமாக மக்களுக்குக் கொடுத்துவிட்டார். சமீபத்திலே இந்தியாவை சீனம் தாக்கியபோது இந்திய மக்களனைவரும் தேசாபிமானத்துடன் கட்டுப்பாடாகத் திரண்டு, இந்திய சுதந்திரத்தைக் காக்க, நேருஜிக்கு எல்லா உதவிகளையும் அளிக்க வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்து தமது பூரண ஆதரவையும் நல்கினர். இந்த நெருக்கடியான சமயத்தில் அப்பெரிய மனிதரின் தியாக வாழ்க்கையும், அவர் கூறிய பொன்மொழிகளும், பாரதநாட்டு மக்களுக்கு மட்டுமன்றி, இலங்கை மக்களுக்கும் கலங்கரை விளக்குப் போல் மேலான வழிகாட்டியாக இருக்க வேண்டும். பெரியார் ராஜன்பாபு மறைந்தார். அவர் நீடூழி வாழ்க!

# இந்தியாவின் முதல் ஜனாதிபதி ராஜேந்திர பிரசாத்

**காந்தியை மகாத்மா என்று அழைத்த மக்கள் மற்றொருவரை சாந்தாத்மா என்று அழைத்தனர் அவர் தான் டாக்டர் ராஜேந்திர பிரசாத் தமது 78-வது வயதில் நேற்று முன்தினமிரவு இவ்வுலக வாழ்வை நீத்த ராஜன்பாபு சில வருடங்களுக்கு முன் யாழ்ப்பாணத்துக்கும் விஜயம் செய்திருந்தார்**


வாழையடி வாழையாகப் பெருமை வாய்ந்த குடும்பத்தில் தோன்றியவர் ராஜேந்திர பிரசாத் அவர் பாட்டனார் ஒரு சமஸ்தானத்தின் திவானாக இருந்தவர் திரண்ட செல்வமும் சேர்த்தார். அந்தசெல்வத்தை ஏழைகளுக்குப் பகிர்ந்து கொடுத்தார். பற்பல தருமங்கள் செய்தார். அதனால் செல்வம் குறைந்தது. அதுபற்றிச் சிறிதும் அவர் வருந்தவில்லை இன்பமே கொண்டார்.

ராஜேந்திரரின் தந்தையாரான மகாதேவ சகாயருக்கு ஒரு சிறிதே பூமி உண்டு கையிருப்பில் அதிகம் பணம் இல்லை. ஆதலின் தம் புதல்வர் ராஜேந்திரர் ஐ. ஸி. எஸ். பரீட்சையில் தேறி பெருமைபெறவேண்டும் என்று அவருக்கு ஆவல் பிறந்தது.

தந்தையின் சொல்லைத்தட்டி நடந்த ராஜேந்திரர் துணிவு கொள்ளவில்லை. ஆனாலும் ஐ. ஸி எஸ். பரீட்சையில தேறி அந்நிய அரசின் கையாளாக வேலைபார்க்க அவரது மனச்சாட்சி இடம்தரவில்லை. அது கண்டு தந்தையார் மகாதேவர் மனநோய் கொள்ள நேர்ந்தது.

தந்தையாருக்குப் பிறகு தமயனார் மகேந்திரப்பிரஸாத்தே ராஜேந்திரரை இனிது. வளர்த்தார். ராஜேந்திரர் இந்திய ஊழியர் சங்கத்தில் சேரத் துடித்து நின்றதை மகேந்திரர் ஒப்புக்கொள்ளவில்லை. தம்பியாரின் மனநிலை கண்டு துயர் மிகுந்து கண்ணீர் வடித்தார். அது கண்டதும் ராஜேந்திரர் தமது உள்ளத் துடிப்பை ஒருபுறம் நிறுத்தி மூத்தவரது மனம் குளிர நடக்க முற்பட்டார்.

ஊழியர் சங்கத்தில் சேராவிடினும் தியாக சமுத்திரமாய் ராஜேந்திரர் விளங்கினார். துறவுத்தன்மை பிறவியிலேயே அவரிடம் அமைந்தது அவரை நோக்கும் அளவில் யாவருக்கும் பெருந்தன்மை வளரும் நட்பும் விரிந்த ஞானமும் அடக்கமும் பொறுமையும் அவருக்கு அணிகளாம் குறுகிய சிந்தனையும் செருக்கிய சொல்லும் அவரைக்கண்டு எட்ட நிற்கும் சகிப்புத்தன்மையும் சலியா உழைப்பும் அவருக்கு ஊன்றுகோல்கள் ஆரும் அவருக்கு இன்னார் இனியார் என்பது இல்லை. எல்லாரையும் சகோதரர் என்று நினைக்கும் சீரிய தன்மை அவரிடம் மிகுதி. பொதுவாழ்விலும் குடும்பவாழ்க்கையிலும் பலவகையான நண்பர்களுடன் பழகும்போது அவரது உள்ளத்தூய்மையும் கள்ள



ராஜன் பாபு

மற்ற சொல்லும் கண்டு களியாதார் இலர் "உலகு அனைத்தும் ஈசுவர மயம், மக்கள் அனைவரும் நடமாடும் கோயில்" என்னும் கொள்கை அவரது நடைமுறையைத் துலக்கும்.

காசும் பணமும் செல்வம் அல்ல நன்னெறியும் நற்குணமுமே தனிசிறந்த செல்வம் அச்செல்வமே எல்லாச் சிறப்பும் தரும் என்றும் உண்மைக்கு அவரே இருப்பிடம் சுருங்கச் சொல்லின் அவர் குலக் குன்று குன்றின் மீரிட்ட ஜோதி.

கலாசாலைப் படிப்பு முடிந்து சொந்த ஊருக்குத் திரும்பிய நாளில் அங்கிருந்த கலாசாலையில்ஆசிரியராக பணிஆற்றினர்.

சிறப்பு வாய்ந்த பீகாத்மாகாணத்தில் பிறந்த பாபு ராஜேந்திரசாதாரின் சிறப்பு பிள்ளைப் பருவத்திலேயே பரிமளித்தது. முதன் முதல் அவருக்கு ஆசிரிராய் அமர்ந்தவர் ஒரு மூகமதியப் பண்டிதர். பிள்ளையின் முகத்தை நோக்கியதும் பெருமதியின் ஒளியை அறிந்து அப்பிள்ளையை வாரியெடுத்து முத்தமிட்டார் அந்த மூகமதிய ஆசிரியர்.

ஆரம்பப பள்ளி முதல் பல்கலைக்கழகம் வரையில் அவரைக்காண நேர்ந்த ஆசிரியர் ஒவ்வொருவரும் அவரது விவேக ஆற்றலை மெச்சினர். ஆண்டுக்கு இரண்டு வகுப்பு வீதம் தலைமை ஆசிரியரால் அவர் வகுப்பேற்றப்பட்டார் எந்த வகுப்பிலும்அவரே முதல் மாணவர்.

படித்த வழக்கறிஞரும் ஓடும் பிரபல சட்ட நிபுணரும் நிரம்பிய கல்கத்தா உயர் நீதி மன்றத்தில் ஆரம்பத்திலேயே அவரது வாத நேர்த்தியும் சட்ட ஞான நுணுக்கமும் புகழை வாரிக்கொணர்ந்தன. வரும்படியையும் ஏராளமாகக் கொண்டு வந்து குவித்தன. பாடலிபுரம் வந்து அங்குள்ள உயர் நீதி மன்றத்தில் வழக்கறிஞராய் தொழில் தொடங்கிய காலத்திலும் புகழும் பணமும் அவரை நாடிவந்தன.

சண்பகவன ஜில்லாவிலே காந்தி மகான் கன்னிப்போர் தொடங்கிய பொழுது பற்பலர் உடனிருந்து உதவி வந்தாலும் பிரசாதரின் மதிநலமும் அடக்கமுமே அப்பெருமான உள்ளத்தில் பெரிதும் குடிகொண்டன அத்தகைய துணைவர் வாய்த்தது ஒரு பாக்கியமே என காந்தி மகான் களிப்புக் கொண்டார்.

வங்காளப் பிரிவினை காலத்திலே வங்கவாலிபர் கொதிப்பு மிகுந்து நட்புக்குப் போட்டியாக வெடிகுண்டும் கைத்துப்பாக்கியும் மேற்கொண்டபோது அங்கிருந்த பீகார்வாலிபர் அவ்விரண்டையும் மேற்கொள்ளாமல் இருந்ததற்கு நம் ராஜேந்திரரின் இனிய அறிவுரையே காரணமாகும். ராஜேந்திரரின் நல்லுரை கேட்பார் மிக்க சாந்த புருஷராகத்துலங்கக் கருதுவர் செல்வத்தைச் சேமித்து வைப்பதைவிட அதனைப் பிறருக்கு அள்ளி வழங்குதலே பெருமை தரும் என்பது ராஜேந்திரரின் கோட்பாடாகும். இவரது வாழ்க்கையை உற்று நோக்கினல் முற்றும் துறந்த இல்லத் துறவியென்றே அவரை நாம் கொள்ள நேரும். புகழ்ச்சி கண்டு பரவசமோ இகழ்ச்சி கண்டு மனக்கலக்கமோ அவரிடம் தோன்று. பாரதத் தாய் மனங்களிக்கும்வண்ணம் அனைவரும் நடக்க வேண்டும்என்று அவர் உரைத்து வருவார்.

ஊழியம் தியாகம் இரண்டையும் குறிக்கோளாகக் கொண்டு இளைஞர் பலரும் குடியரசை வானுற வளர்க்க வேண்டும் என்று எக் காலத்திலும் அவர் விரும்பினார்.

ராஜேந்திரரின் வாழ்க்கை வரலாறு இந்திய தேசத்தின் அரசியல் சரித்தத்தோடு பின்னிப் பிணைந்தது.

இந்தியாவின் நடுநாயகமான தலைவர் மகாத்மா காந்தி. அவருக்கு அடுத்தபடியாக அவரது வலக்கை போலுள்ளவர் மூவர். அம் மூவருள் ராஜேந்திரர் திலகம் போன்றவர்" என பிரபல அமெரிக்க எழுத்தாளர் ஜோன் காதர் ஒரு சமயம் எழுதினர். அம் மூவரும் ஒரே உருவமெனக் கொண்டால் அந்த உருவத்தின் இதயம் போன்றவர் பிரஸாதரே என அவர் மேலும் குறிப்பிட்டிருக்கிறார்.

ராஜேந்திரர் ராஷ்டிரபதி ஆனதும் தமிழகத்திற்கு விஜயம் செய்தார். தற்போது தமது சொல்லாலும் செயலாலும் தமிழ் மக்களின் உள்ளத்தைக் கொள்ளைகொண்டார். காந்தியை மகாத்மா என்றால் ராஜேந்திரரைச் சாந்தாத்துமா எனல் வேண்டு என்று தமிழர் அனைவரும் புகழ்ந்து பேசினர்

மனம் அடங்கினல் மற்றது அடங்கும் என்பார் பெரியார். மனத்தை அடக்கியே மகாத்மா ஆனார் காந்தியடிகள். அவ்வாறே உள்ளத்தை அடக்கி உத்தமராய் விளங்கினார் ராஜேந்திரர். அவர் சத்தியாக்கிரக போராட்டத்தில் சேர்ந்த நாள்முதல் தேச நினைப்பும் தேச ஊழியமுமே அவருடைய கருமங்களாயின அவரைப் பீடித்த காசநோய் காரணமாக ஓரோர் சமயங்களில் அவரிடம் தலைகாட்டும் குணதோஷங்களை அவர் வென்று வந்ததை அனைவரும் கண்டு அதிசயித்தார்கள்.

ஒத்துழையாப்போரில் சேர்ந்ததும் வழக்கறிஞர் வேலையை அவர் கைவிட்டார். அப்போது முடிவாகாமல் இருந்த ஒரு வழக்கின் நிமித்தமாக அவர் இங்கிலாந்து செல்ல வேண்டியும் ஏற்பட்டது. வழக்கில் வெற்றி கண்ட பிற்பாடு ஐரோப்பாவில் பற்பல தேசங்

(5-ம் பக்கம்பார்க்க)

## ஐயாறன் எழுதுவது

ராஜேந்திரபிரசாத் சிவபதமடைந்த செய்தியைக் கேட்டதும் திடுக்கிட்டேன். பன்முறை சிறைசென்ற அவருக்கு இளவயதிலிருந்தே உடல்நலமில்லை. காசத்தால் வருந்தினர். ஒரு முறை திருவண்ணமலை வந்து ஸ்ரீ ரமணமகரிஷியையும் தரிசித்து, மகரிஷியுடன் நீண்டநேரம் சம்பாஷித்தார்.

ஜனாதிபதியாக இருக்கையில் ஓர்முறைஉடல்நலம்மோசமானதும் இந்தியாவில் பலரும் அவருக்காகப் பிரார்த்தனைகள் செய்து எமனை விரட்டிவிட்டனர். ஓய்வுபெற்று, புதிய ஆசிரமத்தில் அவர் தங்கிப் பணிசெய்கையில், இவ்வளவு சடுதியாக அவர்பிரிவாரென்று யாரும் எதிர்பார்க்கவில்லை.

* * *

இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வரும் பல பெரியார்கள், கொழும்பு, கண்டியுடன் திரும்பிவிடுவார்கள். ஆனல் ஜனாதிபதி ராஜன்பாபு, இங்கு யாழ்ப்பாணத்துக்கும் வந்து நம்மைக் கௌரவித்தார். அந்த விஜயத்தின் ஞாபகமாக அவர் பெயர், நகரமண்டபத்துக்குச் செல்லும் தெருவுக்கு நன்றியுடன் அளிக்கப்பட்டுள்ளது. ராஜன்பாபு அளித்த பெரிய ரத்னக்கம்பளம், யாழ்ப்பாண நூல்நிலையத்தின் முன்புறத்தை அலங்கரிப்பதைக் காணலாம்.

* * *

இந்தியா—இலங்கை இரு நாடுகளுக்கும் புராதன காலம் தொட்டு இருந்துவரும் உறவை அவர் ஞாபகமூட்டினர். அந்த நல்லுறவைப் பலப்படுத்துவது நமக்கு நாமே செய்துகொள்ளும் நன்மையாகுமல்லவா?

இப்போது இந்தியாவுக்கு வந்துள்ள ஆபத்தைப்பற்றி இங்கு சிலர் கவலைப்படவில்லை. உள்ளூர ஒருவித மகிழ்ச்சியுமடைந்துளளனராம்! ஆனல் இந்தியா விடுதலை பெற்றதால் தான் நாமும்(கேட்காமலேயே) சுதந்தரம் பெற முடிந்ததென்பதையும், இந்தியா சுதந்திரமிழந்தால், உடன் நமது சுதந்தரமும் பறிபோகுமென்பதையும் அவர்கள் உணரவில்லை. பரிதாபம்!

* * *

இந்தியாவின் முதல் ஜனாதிபதியை யாழ்ப்பாணத்தில் ராஜோபசாரத்துடன் வரவேற்க, பலாலி விமானநிலையத்திலே செய்திருந்த விசேஷ ஏற்பாடுகளெல்லாம் என்மனக் கண்முன் தோன்றுகின்றன. வருணன் கொழும்பு வரவேற்பைக் குலைத்துவிட்டு, யாழ்ப்பாணத்தில் தண்ணீரெல்லாம் தெளித்து ஊரெல்லாம் பந்தல் போட்டு, வெயில் தாக்காமல் செய்து உதவியதை எல்லாம் மறக்கமுடியவில்லை.

இங்கு தமிழ்ப்பண்புடனே அவ்வளவு சிறப்பாக வரவேற்புக்கு ஒழுங்குசெய்த கலைப்புலவர் நவரத்னமவர்களும் மறைந்துவிட்டார் அவருக்குப்பின் இவ்வித ஏற்பாடுகளைச் செய்ய யாருள்ளனர்?

கலைப்புலவரை, யாழ்ப்பாணம் மறந்துவிடுமோ என்று ஓரன்பர் அச்சம் தெரிவித்தார். நன்றி மறப்பது பெரியபாவம். கலைப்புலவரின் பெயரால் பயனுள்ள நல்ல ஞாபகச்சின்னத்தை ஏற்படுத்தவேண்டியது யாழ்ப்பாணத்தின் பெருங்கடமையாகும்.

* * *

நல்லூரிலே விஷவைத்தியக் கல்லூரியை நடத்துவதாகக் கூறி ஒருவர் 'ஈழநாட்டில்' விளம்பரம் செய்ததாயும், அதற்குக் காஷியர், குமாஸ்தா வேண்டுமென்று கூறி, இரு ஆண்களையும். மூன்று பெண்களையும் ஒவ்வொருவரிடமும் 500 ரூபாய் பிணைப்பணம் பெற்று நியமித்து, இரண்டு மாதத்தில் இரவோடு இரவாக போர்டு, தளபாடம் இவற்றை எடுத்துக்கொண்டு கம்பி நீட்டிவிட்டதாயும், இப்படி

(8-ம் பக்கம்பார்க்க)

# புதுடில்லி-பீக்கிங் சமாதானஅணி

## இன்றுயாத்திரை ஆரம்பம்

புதுடில்லி, மார்ச் 1

இந்தியாவுக்கும் சீனவுக்குமிடையே ஏற்பட்டிருக்கும் நெருக்கடியைத் தளர்த்தும்முகமாக, சமாதானஅணியொன்று நாளை சனிக்கிழமை புதுடில்லியிலிருந்து பீக்கிங் நோக்கி புறப்படுகிறது. இந்தச் சமாதான அணிக்கு 68 வயதுள்ள சங்கர்தாவ்ராவ் தலைமை வகிக்கிருர்.

இந்தச்சமாதான அணியில் ஐந்து நாடுகளைச் சேர்ந்த பத்துப்பேர் அங்கத்துவம் வகிக்கின்றனர்.

இந்தியாவைச் சேர்ந்த 25 வயதுள்ள ஒரு பெண்மணியும் இந்தச் சமாதான யாத்திரையில் இடம்பெற்றுள்ளார். இவருடன், ஜப்பானைச் சேர்ந்த பௌத்த குருவும், மற்றும் அமெரிக்கா, பிரிட்டன், ஆஸ்திரியா ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்களும் சமாதான யாத்திரையை மேற்கொண்டுள்ளனர்.

ராஜ்காட்டிலிருந்து ஆரம்பமாகும் இந்தச் சமாதானஅணியில் சேர்ந்துள்ளவர்கள், நாள் ஒன்றுக்கு 7—8 மைல் வீதம் பாதயாத்திரை செய்து 18 மாதங்களில் பீக்கிங் சென்றடைவார்கள். இவர்கள் மொத்தமாக 4000 மைல்தூரம் பாதயாத்திரை செய்வார்கள். இவர்கள் கிழக்குப்பாகிஸ்தான், பர்மா ஆகிய நாடுகளுக்கூடாக பீக்கிங் சென்றடைவார்கள்.

---

# பின்புறம்நின்று குத்திவிட்டு ஓடினர்

## வேலணைகொலை வழக்கில்சாட்சியம்

ஊர்காவற்றுறை, வெள்ளி

வேலணை மேற்கு வாசியான முருகேசு சின்னத்தம்பியை கடந்த ஜனவரி மாதம் 4-ந் திகதி கொலை செய்ததாக அதே ஊரைச் சேர்ந்த தச்சுத் தொழிலாளியான கந்தையா சண்முகராசா மீது குற்றஞ் சாட்டித் தொகரப்பட்ட வழக்கு ஊர்காவற்றுறை பொலிஸ் நீதிமன்றத்தில் மாஜிஸ்டிரேட் திரு. வி. எம். குமாரசாமி முன்னிலையில் விசாரணைக்கெடுத்துக்கொள்ளப்பட்டது.

கடை வியாபாரியான செல்லையா கந்தையா சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

இறந்தவர் எனது அயலவர். அவரை எனக்குப் பதினைந்து வருடங்களாகத் தெரியும். சம்பவம் நடைபெற்ற தினத்தன்று எனது கடையில் இருந்தேன். ஐயோ என்ற அவலக்குரல் கேட்டது. வெளியே திரும்பிப் பார்த்தேன். இப்போது இறந்தவரும் எதிரியும் ஒருவரையொருவர் தள்ளுப்பட்டனர். பின்னர் நான் அவர்களுக்குக் கிட்டப்போய்க்கொண்டிருக்கையில் எதிரி இறந்தவருக்குப் பின்னல் நின்று குத்திவிட்டு உடையின்றி ஓடியதைக் கண்டேன்.

எதிரி தரப்பில் ஆஜரான சிரேஷ்ட வழக்கறிஞர் திரு. டி. கணேசலிங்கம் சாட்சியைக் குறுக்குவிசாரணை செய்தார். மாஜிஸ்டிரேட் மேல்விசாரணையை இம்மாதம் 8-ந் திகதி வரை ஒத்திவைத்தார்.

எதிரி தரப்பில் திரு பி. கதிரவேலு அலுசரணையுடன் திரு. டி. கணேசலிங்கம ஆஜரானர். பொலிசார் சார்பில் திரு. எஸ். வி. கதிரவேலு ஆஜரானர்.

---

# கணவனும் மனைவியும்

## தாக்கியதாகத் தொடரப்பட்ட வழக்கு

### எதிரிகள் விடுதலை

மாவிட்டபுரம், வெள்ளி

குசவக்கட்டுவனைச் சேர்ந்த சின்னவன் வேலன் என்பவரை, அதே ஊரைச் சேர்ந்த முருகன் சுந்தரம், அவரது மனைவி இராசம்மா ஆகியோர் போத்தல், கை, கல்லு ஆகியவற்றினல் தாக்கிப் படுகாயம் விளைவித்ததாகவும், கழுத்தைத் திருகியதாகவும் சுன்னகம் பொலிசாரால் குற்றம்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு மல்லாகம் மாஜிஸ்டிரேட் திரு. வெஸ்லி டி. தாமோதரம் முன்னிலையில் விசாரணைக்கெடுத்துக்கொள்ளப்பட்டது.

சின்னவன் வேலன் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

இரண்டாம் எதிரி எனது மகள். முதலாம் எதிரி மருமகன். சென்ற வருஷம் மார்ச் மாதம் 8-ம் திகதி நான் வேலைக்குப் போய்விட்டுத் திரும்பி வரும்போது, மீன் வாங்கிக் கொண்டுவந்தேன். அச்சமயம், முதலாம், இரண்டாம் எதிரிகளும் எனது இளைய மகள் இராசபூபதியும் அங்கு நின்றுர்கள். இராசபூபதியிடம் மீனைக் கழுவித்தருவதற்கு சட்டியையும் கத்தியையும் எடுத்துக் கொண்டுவரும்படி கூறினேன். அவர் எடுத்துவந்தார். நான் கழுவிக்கொடுத்தேன். பின்பு கை கழுவ தண்ணீர் கொண்டு வரும்படி சொன்னேன். இராசபூபதி தண்ணீர் கொண்டுவர கிணற்றடிக்குப் போய்விட்டார். அப்போது நான் விருந்தையில் நின்றேன்.

அப்போது இரண்டாம் எதிரி வந்து என்னைத் தள்ளி விழுத்தினர். பின் தலைமயிரில் பிடித்துக்கொண்டு இரு கன்னங்களிலும் கல்லினல் குத்தினர். நான் அப்போது எழும்ப முயன்றேன். முதலாம் எதிரி வந்து கையில்பிடித்து இழுத்து திரும்பவும் விழுத்தினர். பின்னர் கனமுள்ள போத்தலினல் நெஞ்சில் அடித்தரர். போத்தல் உடையவில்லை. போத்தலில் தண்ணீரோ மண்ணோ நிரப்பியிருக்கவேண்டும். போத்தலினல் 3 தடவை அடித்தார். பின்னர் முதலாம் எதிரி கழுத்தைத் திருகினர். நான் ஓடினேன். முதலாம் எதிரி பெரிய கல் ஒன்றுல் எறிந்தார். கல் பின்புறமாக வீழ்ந்தது. நான் உடனே விழுந்துவிட்டேன். ஆஸ்பத்திரியிலே சுயநினைவு பெற்றேன். ஆஸ்பத்திரியில் 35 நாட்கள் இருந்தேன். எதிரிகள் என்னுடைய வீட்டைத் தமது பெயருக்கு எழுதவில்லை என்பதனுலும், எனக்குத்தர வேண்டிய 114 ரூபாவைத் திரும்படி கேட்டதனுலும் என் மேல் கோபமாக இருந்தனர். எனக்கு 11 பிள்ளைகள். இரண்டாம் எதிரிக்கு வேறு காணி சீதனமாகக் கொடுத்துள்ளேன். அவர் பிரசவத்திற்காக கடந்த 9 மாதங்களாக அங்கே இருக்கிருர்.

டாக்டர் எஸ். இராஜசூரியர், வேலன் மகாலிங்கம், வேலன் இராசபூபதி ஆகியோரும் சாட்சியமளித்தனர்.

சாட்சியங்கள் ஒன்றுக்கொன்று முரணுக இருந்தமையால் மாஜிஸ்டிரேட் எதிரிகளை விடுதலை செய்தார். சப் இன்ஸ்பெக்டர் திரு. சி. தியாகராஜா வழக்கை நடத்தினர். திரு. ஆர். ஜே. செல்வரத்தினம் எதிரி சார்பில் ஆஜரானர்.

---

## மூவர்மீதும்கொலை..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ரின் மூத்தமகள் ராஜலட்சுமி அழகாக பாவாடை சட்டையணிந்து, தலையைப் பின்னி இரட்டைப் பின்னல் கட்டியிருந்தார். 'பவுண்' சங்கிலி காப்பு அணிந்திருந்தார்.

### முகத்தைப் பார்க்கவில்லை

கோகிலாம்பாள் கோர்ட்டிற்குள் வந்ததும், ராஜலட்சுமி தாயின் முகத்தைப் ஒரு தடவையாவது பார்க்காமல், வழக்கு விசாரணையைப் பார்க்க வந்திருந்த பெண்களுடன் பேசிக்கொண்டிருந்தார். பெண்களும், ராஜலட்சுமியிடம் கேள்விக்கணைகள் தொடுத்து திணறடித்துக் கொண்டிருந்தார்கள்.

இன்று வழக்கத்திற்கு மாருக 'வழக்காளிகளின்' அருகே போடப்பட்டிருந்த வாங்கிலில் கோகிலாம்பாள் போய் இருந்தார். வழக்காளிகளின் வாங்கில், கோகிலாம்பாளுக்கு அருகே, கொலைசெய்யப்பட்ட ஐயரின் தகப்பனர் உட்காந்திருந்தார். மாமனும் மருமகளும் ஒரு தடவையாவது நேருக்கு நேர் முகத்தைப் பார்க்கவில்லை.

கோகிலாம்பாள் அமர்ந்திருந்த வாங்கின் பின்புறத்தில் பசுபதியும், வேலுப்பிள்ளையும் கூண்டிற்குள் நின்றுர்கள். அவர்களைக்கூட, கோகிலாம்பாளோ, அவரின் மாமனுரோ, மகள் ராசலட்சுமியோ ஒரு தடமையாவது பார்க்கவில்லை.

இந்த தடவை, பசுபதியும் வேலுப்பிள்ளையும், நெற்றியில் சந்தனப்பொட்டு இடவில்லை. இருவரும் வெள்ளை வேட்டியுடுத்தி 'ரெடி மேட் சேட்' அணிந்திருந்தார்கள்.

### பேத்தியுடன் வந்தார்

காலஞ்சென்ற கோயில் ஐயரின் மூத்த மகள் ராஜலட்சுமியை, சாவகச்சேரிக் கோர்ட்டில், இன்று ஆஜராகும்படி, கிளிநொச்சி இன்ஸ்பெக்டர் திரு. பொன்னுத்துரை நெடுந்தீவு காரியாதிகாரிமூலம் அறிவித்ததைத் தொடர்ந்து இன்று சாவகச்சேரி கோட்டிற்கு ராஜலட்சுமியை பேரன் அழைத்து வந்தார்.

கிளிநொச்சி பொலிஸ் இன்ஸ்பெக்டர் கோர்ட்டிற்கு வராததால், கிளிநொச்சி பொலிஸ் சார்ஜண்ட், ராஜலட்சுமியை மீண்டும் 14-ம் 15-ம் தேதி வரும்படி கூறியதோடு, காலஞ்சென்ற ஐயரின் தகப்பன், சகோதரன் எல்லோரையும் அடுத்த தவணைக்கு கட்டாயம் வரும்படி கூறினர். காலஞ்சென்ற ஐயரின் சகோதரர் லட்சுமண சர்மா கண்டியில் இருந்து இன்று கோர்ட்டிற்கு வந்திருந்தார்.

### விவாகம் நடந்தது தெரியாது

காலஞ்சென்ற கோயில் ஐயரின் தகப்பனர், தன் பேத்தி ராஜலட்சுமியுடன், நெடுந்தீவிலிருந்து இன்று நேரத்துடன் கோர்ட்டிற்கு வந்திருந்தார். காலஞ்சென்ற ஐயர், காசிலிங்க சர்மா, துன்னலையில் அவரின் மாமன் வீட்டிலிருந்த போதுதான் கோகிலாம்பாளை மணந்தார். மாமன்தான் இந்த விவாகத்தை ஒழுங்குபடுத்தினர் என்று தகப்பனர் கூறி "மகனின் கல்யாணத்திற்கு நான் போகவில்லை. மூத்த பிள்ளையை பெற்று வீட்டிற்கு வந்தபொழுதுதான் மகன் கலியாணம் முடித்ததாக அறிந்தேன்" என்று அவர் சொன்னர். கோகிலாம்பாளுக்கு தற்பொழுது 33 வயதாகிறது. காலஞ்சென்ற ஐயருக்கு 39 வயது.

மார்கழி 14-ந் தேதிக்குப் பிறகும், அதாவது கொலை நடந்ததாகக் கூறப்பட்ட நாளுக்கு பின்பும், கோயிலில் வேறு ஒருவர் பூசை செய்ததாக தகப்பனர் கூறினர்.

மூத்த மகள் ராஜலட்சுமி, தான் நெடுந்தீவிலுள்ள பாடசாலையில் தற்போது படிப்பதாகவும், தனது பேரன் வீட்டிலிருப்பதாகவும் கூறினர். ஐயா எங்கே? என்று ராஜலட்சுமியை கேட்ட போது 'செத்துப்போனர்' என்றும், அம்மா எங்கே? என்றதும் 'கோர்ட்டுக்கு வருவா' என்று கூறினர். கோர்ட்டிற்கு வரத் தனது தம்பியும் விரும்பியதாகவும், தாங்கள் கூட்டிவரவில்லையென்றும் கூறினர்.

இன்று கோர்ட்டிற்கு காலஞ்சென்ற ஐயரின் சொந்தக்காரர் பலர் தூர இடங்களிலிருந்து வந்திருந்தார்கள்.

---

# 'விளையாடச் சென்றுள் சிறுமி; பின் இறந்தநிலையில் கண்டேன்'

## லொறிமோதல் சம்பவத்தில் சாட்சியம்

மாவிட்டபுரம், வெள்ளி

அச்சுவேலியைச் சேர்ந்த தம்பளை என்னுமிடத்தில் நாகமணியின் மகள் சுகுண (6 வயது) என்னும் சிறுமி லொறியினல் மோதுண்டு ஸ்தலத்தில் மரணமடைந்தது சம்பந்தமாக மல்லாகம் நீதிபதி திரு. வெஸ்லி டி' தாமோதரம் மரணவிசாரணை நடத்தினர். சப்-இன்ஸ்பெக்டர் திரு. ஏ. இராசையா சாட்சிகளை ஆஜர் செய்தார்.

வைரமுத்து கந்தையா சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

சம்பவதினம் மாலை 5 மணியளவில் பஸ்வண்டிக்காக விபத்து நடந்த இடத்திலிருந்து 324 அடி தூரத்தில் நின்றேன். காலஞ் சென்ற சிறுமி வீட்டுக்கு அருகில் நின்றுள். அச்சமயம் லொறி என்னைத் தாண்டி அச்சுவேலிப் பக்கத்திலிருந்து தொண்டமானறு நோக்கிச் சென்றது. நான் அச்சுவேலிக்குப் போவதற்காக நின்றேன். லொறிச் சாரதியை எனக்குத் தெரியாது. நான் தொண்டமானறு பக்கத்தைப் பார்த்துக் கொண்டு நின்றமையினல், லொறியின் பின்பக்கம் தெரிந்தது. லொறி குழந்தை மீது மோதுவதற்கு முன் நான் குழந்தையைக் காணவில்லை. திடீரென்று சத்தமொன்று கேட்டது. அப்போது குழந்தை விழுந்ததைக் கண்டேன். அச்சமயம் ரோட்டில் வாகனப் போக்குவரத்தில்லை. ஆட்களும் இல்லை. லொறி சாதாரண வேகத்தில் தான் சென்றது. லொறியின் எந்தப்பாகம் சிறுமியை மோயது என்பது எனக்குத் தெரியாது. நான் தான் சம்பவத்தை முதலிற் கண்டதும் ஸ்தலத்திற்குச் சென்றதும். சிறுமியை அவரது வீட்டுக்கு கொண்டு சென்றேன். அங்கு இரு பெண்கள் நின்றுர்கள். அவர்களின் பொறுப்பில் சிறுமியை ஒப்படைத்து விட்டு கார்பிடிக்கச் சென்றேன். கார்கள் ஒன்றும் கிடைக்கவில்லை. இதனுல் திரும்பி வந்தேன். அப்போது சிறுமி இறந்து விட்டதாக அறிந்தேன். இவ்விபத்து நடப்பதற்குச் சிறிது நேரத்திற்கு முன்னர் மழை தூறியது. சாரதியைக் கண்டு அவரை அடையாளம் காட்ட முடியாது.

சபாபதி நேசமணி சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

காலஞ் சென்றசிறுமி எனது சகோதரியின் மகள். சம்பவத்திற்கு சிறிது நேரத்திற்கு முன்னுல் அடுத்த வீட்டில் விளையாடுவதற்காக செல்ல அனுமதி கோரினர். நான் அனுமதித்தேன். சிறிது நேரத்தின் பின் சிறுமியை இறந்த நிலையிலே கண்டேன்.

தப்பியோடிய லொறிசாரதி வல்வெட்டித்துறையைச் சேர்ந்த துரைச்சாமி பொன்னம்பலம் அல்லது கந்தவனம் என்பவரை காங்கேசந்துறை உதவி பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. கந்தையா மாஜிஸ்டிரேட் முன்னிலையில் ஆஜர் செய்தார். மாஜிஸ்டிரேட் எதிரியை 1500 ரூபா பிணையிலும் லொறியை 2000 ரூபா பிணையிற் கொண்டு செலலவும் அனுமதித்தார். காங்கேசன் துறை டி' எம். ஓ. வைப் பிரேதபரிசோதனை செய்ய உத்தரவிட்டு மேல் விசாரணையை பிரேத பரிசோதனை அறிக்கை வரும் வரை ஒத்திவைத்தார்.

---

## இந்தியாவின்..

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

களிலும் சுற்றுப்பிரயாணம் செய்தார். பிரபல தத்துவ ஞானி ரோமன் ரோலாந்து இவரைச் சந்தித்ததுபற்றிக் குறிப்பிடுகையில் "காந்தியை நேரில் கண்டதுபோலக் களிப்படைகிறேன்" என்றுர்.

பிரசாத் தமது காசநோய்க்குச் சிகிச்சை தேட ஆஸ்த்திரியா வியன்ன நகர் சென்ற போது அங்கு அச் சமயம் நடைபெற்ற அகிலதேச சமாதான மகாநட்டில் பங்குபற்றி அரியதொரு சொற்பொழிவாற்றினர்.

---

## இடமாற்றம்

புங்குடுதீவு, வியாழன்

புங்குடுதீவு அரசினர் மகா வித்தியாலய உதவி அதிபராகக் கடமை ஆற்றிய திரு. செ. அமிர்தலிங்கம் ஆசிரியர் (பி. எஸ். ஸி) இம்மாதம் முதல் திகதியுடன், நெல்லியடி மத்திய கல்லூரிக்கு மாற்றம்செய்யப்பட்டுள்ளார்.

---

## பீக்கிங்கில் புட்டோ

பீக்கிங், மாச். 1

எல்லை ஒப்பந்தத்தில் கையெழுத்திடும் பொருட்டு சீன புறப்பிட்டுச் சென்ற பாகிஸ்தான் வெளிநாட்டு மந்திரி திரு. புட்டோ இன்று பீக்கிங் வந்துசேர்ந்தார்.

---

## ஆசியாவில் விஞ்ஞான மகாநாடு

லண்டன், மார்ச் 1

சர்வதேச அணுசக்தி ஏஜன்சி, ஆசியாவில் விஞ்ஞான மகாநாடுகளை இம்மாதத்தில் நடக்கவிருக்கிறது.

இம்மாதம் 5-ந் திகதி முதல் 9-ந் திகதி வரை டோக்கியோவில் நடைபெறும் ஒரு விஞ்ஞான மகாநாட்டில் நிலத்தில் தண்ணீர் கண்டுபிடித்தல், அதை பயன் தரும் முறையில் பயன்படுத்தல் சம்பந்தமாக ஆராயப்படும்.

பம்பாயில் இம்மாதம் 11-ந் திகதி முதல் 15-ந் திகதி வரை நடைபெறும் இரண்டாவது விஞ்ஞான மகாநாட்டில் அணு ஆராய்ச்சி நிலையங்களை பலவிடங்களிலும் நிறுவுவது சம்பந்தமாக ஆராயப்படும்.

இந்த இரு விஞ்ஞான மகாநாடுகளிலும் பல்வேறு நாடுகளையும் சேர்ந்த விஞ்ஞானிகள் பலர் கலந்துகொள்வார்கள்.

---

## படக்காட்சி

மாவிட்டபுரம், வெள்ளி

வீமன்காமம் ஆங்கில பாடசாலையில் அமெரிக்கத் தகவல் பகுதியினரால் செய்திப்படக் காட்சியொன்று காண்பிக்கப்பட்டது. இப்படக்காட்சியை ஏராளமானேர் கண்டு களித்தனர்.

# ‘சீனவிடமிருந்து அரிசி பெறுவது அவமானமில்லையா?’

## ஆர்: ஜி. கேள்வி

நாரமலை, வெள்ளி

‘இங்குள்ள குழந்தைகளுக்கு அமெரிக்காவிடமிருந்து பெறும் பாலும் பணிஸும் கொடுப்பது அவமானம் எனக் கருதினல், சீனவிலிருந்து பெறும் அரிசியை நம் நாட்டிலுள்ள வயதுவந்தவர்களுக்கு விநியோகம் செய்வது இதைவிட அவமானமில்லையா?’ என தம்பதெனியா எம். பி. திரு. ஆர். ஜி. சேனநாயக்கா இங்கு நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் கூறினர்.

பிரவேசன லங்காரா பிரிவெனவை வித்தியோதய பல்கலைக் கழகத்துடன் இணைக்கும் வைபத்தையொட்டி நடைபெற்ற கூட்டத்தில் திரு. ஆர். ஜி. சேனநாயக்கா மேற்கண்டவாறு கூறினர். அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

### நிறுத்தியபின்தான் உணர்ந்தார்கள்

அமெரிக்கா இலங்கைக்கு அளித்துவந்த உதவியை நிறுத்தியபின் தான் எமது தலைவர்கள் பிள்ளைகளுக்கு அமெரிக்க பாலையும் பணிஸையும் கொடுப்பது அவமானம் என உணர்ந்திருக்கிறார்கள். இது குறித்து வருந்துகிறேன். நமது வெளிநாட்டுக்கொள்கை வெளிநாடுகளுடன் நேச உறவையும் நல்லெண்ணத்தையும் வளர்ப்பதாக இருக்கவேண்டும். நாம் நேசஉறவை வளர்க்கக்கூடிய நடுநிலைமைக் கொள்கையைக் கடைப்பிடிப்பதால் நாம் ஒவ்வொரு நாட்டிடமிருந்தும் உதவிபெறக்கூடியதாக இருக்கும்!

### குற்றங்கள் மலிகிறது

கல்விபற்றி திரு. ஆர். ஜி. சேனநாயக்கா குறிப்பிட்டுப் பேசுகையில், கொலைக்குற்றச் சாட்டுக்களில் இலங்கை சிக்காகோவுக்கு அடுத்தபடியாக நிற்கிறது. பிள்ளைகளுக்கு சமய அடிப்படையில் கல்வி போதிக்கப்படாதிருப்பதே இதற்குக் காரணம் என்றார்.

---

# சாராயம் போத்தலில் அடைக்க யந்திரம்

கொழும்பு, வெள்ளி

களுத்துறையிலும், கண்டியிலும் உள்ள சாராயத்தைப் போத்தலில் அடைக்கும் நவீன இயந்திர சாதனத்தைப் பொருத்த கலால் இலாகா தீர்மானித்துள்ளது.

இம்மாத இறுதிக்குள் இந்தப் புதிய யந்திரங்கள் இயங்கத் தொடங்கும் என கலால் இலாகா அதிகாரி ஒருவர்தெரிவித்தார்.

இந்த நவீன இயந்திரசாதனங்கள் சாராயத்தை சுகாதார முறைப்படி போத்தல்களில் அடைக்க உதவும் என்றும் இப்பொழுது போத்தலில் சாராயத்தை அடைக்கும்வேலையில் ஈடுபட்டுள்ள பலர் இனி இங்கு தேவைப்படாது போகலாமென்றும் அவர்களுக்கு சாராயம் வடிக்கும் நிலையங்களிலும் பிற இடங்களிலும் வேலை வழங்கப்படும் எனவும் ஒரு அதிகாரி தெரிவித்துள்ளார்.

---

# ஆற்றில் குதித்தனர்!

மொறட்டுவ, வெள்ளி

மொறட்டுவையில் சட்ட விரோதமாக ‘கசிப்பு’ தயாரிக்கப்படுகிறதென்று தகவல் கிடைத்த ஒரு பொலிஸ் கோஷ்டி, குறிப்பிட்ட இடத்துக்குச் சென்று சோதனையிட்டது. பொலிஸ் கோஷ்டியினரைக் கண்ட ‘கசிப்பு’ வடிப்பவர்கள் சிலர் ஓடி, ஒழிந்து ஒரு ஆற்றுக்குள் குதித்தனர். இதைக் கண்ட யனிஸ் என்ற கான்ஸ்டபிள், ஆற்றுக்குள் குதித்து அரை மைல் தூரம் நீந்திச் சென்று; ஒருவரைப் பிடித்தார். பிடிபட்ட நபரான பிரின், மயக்க நிலையில் கரைக்குக் கொண்டுவரப்பட்டார்.

---

# ‘என்.எம். நம்பிக்கை பாழாகிவிட்டது’

## —டட்லி.

அகலவத்தை, வெள்ளி

‘1960-ம் வருடம் மார்ச் மாதத்தில் நடைபெற்ற தேர்தலில் தமது கட்சிதான் ஜெயிக்குமென்றும், தாம் அரசாங்கத்தை அமைக்கலாமென்றும் டாக்டர் என். எம். பெரேரா எண்ணியிருந்தார். ஆனல் அவர் மிகவும் ஏமாற்றப்பட்டுவிட்டார். அவரது கட்சி 10 ஸ்தானங்களையே கைப்பற்ற முடிந்தது.’

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் திரு. டட்லி சேனநாயகா அகலவத்தையில் நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றில் பேசுகையில் கூறினர்.

திரு. டட்லி மேலும் பேசுகையில் கூறியதாவது:-

1960-ம் வருடத் தேர்தலில், டாக்டர் என். எம். ஒரு கூட்டு அரசாங்கத்தை அமைக்கலாம் என்ற நோக்கத்தில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்கு ஆதரவளித்தார். ஆனல் சுதந்திரக் கட்சி 75 ஸ்தானங்களில் வெற்றி பெற்றதும் அவரது எண்ணங்கள் மண்ணுகிவிட்டன. இதனல் நிதிமந்திரியாகும் அவரது நினைவு அப்படியே மூடிவைக்கப்படவேண்டியதாயிற்று.

கியூபாவில் அமெரிக்கா தலையிடுகிறதென்று சமசமாஜக் கட்சியும் கம்யூனிஸ்ட் கட்சியும் ஆர்ப்பாட்டம் செய்தன. ஆனல் இந்தியாவில் இலங்கையைப்போன்று இருமடங்கிலும் பெரிய பகுதியை கம்யூனிஸ்ட் சீன கைப்பற்றியபோதோ அன்றி திபேத்தை முற்றிலுமாக சீன நாசப்படுத்தியபோதோ இந்தக் கட்சிகள் எதுவித கவலையும் கொள்ளவில்லை.

---

# ‘பாலுடன் சீனி வழங்குக’

## நகரசபை கோரிக்கை

பேலியகொடை, வெள்ளி

கெயர் ஸ்தாபனமளிக்கும் பாலுடன் சீனியும் பாடசாலை மாணவர்களுக்கு வழங்குமாறு பேலியகொடை நகர சபை கல்வி இலாகாவைக் கோருவதென முடிவுசெய்துள்ளது.

சீனியின் றிகெயர்ஸ் ஸ்தாபனத்தாரளிக்கும் பால் குடிக்க முடியாதிருப்பதால் பாடசாலை மாணவர்கள் இந்தப் பாலை வெளியே ஊற்றிவிடுகிறார்களென நகரசபை உபதலைவர் திரு. ஜோசப் விஜயசிங்கா தெரிவித்தார்.

நகரசபை அங்கத்தவரான திரு. வின்சன்ட் ராஜபக்ஷ இதுசம்பந்தமாகப் பேசுகையில், பாடசாலை மாணவர்கள் பாலை வெளியே ஊற்றிவிடுவதால் இவ்விதம் கெயர் ஸ்தாபனத்தார் அளிக்கும் பால் வீணுகாது இருக்க அரசாங்கம் சீனி வழங்க வேண்டுமெனக் கோரினர்.

---

# ஹிரோஷிமா கௌரவப் பிரஜை

டோக்கியோ, பெப். 28

அமெரிக்க சஞ்சிகை ஆசிரியர் ஒருவருக்கும ஹொனேலுலு நகர மேயருக்கும் ஹிரோஷிமா நகரின் கௌரவப் பிரஜைகள் என்ற அந்தஸ்து அளித்துக் கௌரவிக்கப்படவிருக்கின்றனர். ஹிரோஷிமா ஒரு சமாதான நகரமாக அபிவிருத்தியடைவதற்கு இவர்கள் செய்த உதவியைப் பாராட்டுமுகமாகவே இந்தப் பிரஜா அந்தஸ்து வழங்கப்படவிருக்கிறது

---

# லாவோஸ் மன்னர்

வாஷிங்டன், பெப். 28

லாவோஸ் மன்னர் சவாங் வத்தன தமது வாஷிங்டன் விஜயத்தை முடித்துக் கொண்டு ஸூரிச்சுக்குப் பயணமானர்.

---

# ரஷ்ய முன்னேற்றத்துக்கு உண்மையான காரணம்

## “சகலருக்கும் சம உரிமை உள்ளதுதான்”

### —உடுவில் எம். பி

குரும்பசிட்டி, வெள்ளி

“இருபத்தெட்டுக் கோடி மக்கள் வாழ்கின்ற ரஷ்யா தேசத்தில் அரசியல், பொருளாதார, கலாச்சார வளர்ச்சி பூரணமான தன்மையடைந்துள்ளமையை நாம் காண்கின்றோம். இவ்வளர்ச்சி கம்யூனிஸத்தினுல் தான் ஏற்பட்டதெனப் பலர் அபிப்பிராயப்படுகின்றனர். ஆனல் உண்மைக் காரணம் சோவியத் நாட்டு மக்களிடையே உரிமைகள் சம அர்தஸ்தாகப் பகிர்ந்தளிக்கப்பட்டு சமத்துவ ஆட்சி நிலவுவதேயாகும்” இவ்வாறு உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் நடைபெறும் செக்கோஸ்லவாக்கிய புத்தக்புகைப்பட ஓவிய முத்திரைக் கண்காட்சியைத் திறந்துவைத்துப் பேசுகையில் கூறினர்.

குரும்பசிட்டி உதயதாரகை சன சமூக நிலைய ஆதரவில் ஒழுங்குசெய்யப்பட்டுள்ள இக்கண்காட்சி சிறப்பு விழா வைபவத்திற்கு மகாஜனக் கல்லூரி அதிபர் திரு. தெ. து. ஜெயரத்தினம் தலைமை வகித்தார். குரும்பசிட்டி உதயதாரகை சன சமூக நிலையக் காரியதரிசி வரவேற்புரை நிகழ்த்தினர்.

திரு. தர்மலிங்கம் பேசும்போது கூறியதாவது: ரஷ்யா நாட்டிலே 30 லட்ச மக்களைக் கொண்ட சுஜூதான் இனம் சிறுபான்மையினராக இருந்தபோதிலும் இவர்களும் மற்றைய நாற்பது இனத்தவரைப் போன்று சகல உரிமைகளையும் பெற்று சந்தோஷமாக வாழ்கின்றனர். செக்கோஸ்லவாக்கிய நாட்டிலும் இதுபோன்று சிறுபான்மை மக்கள் மொழி, அரசியல், கலாச்சார உரிமைகளைப் பெற்றுள்ளனர். நமது நாட்டிலும் இதேபோன்றஆட்சி நிலவுமேயானல் சிங்கள-தமிழ் இன வேறுபாடுமின்றி இரு தரப்பினரும் சகோதரத்துவமாக வாழலாம்.

இக் கலாச்சார கண்காட்சியின் மூலம் தமிழ் மக்கள் செக். நாட்டு அரசியல் முறைபற்றியும் வாழ்க்கை, கல்வி முறைகள் பற்றியும் அறிந்துகொள்ள வாய்ப்புக்கள் ஏற்பட்டுள்ளது. இலங்கை – செக்கோஸ்லவாக்கிய நட்புறவு மேலும் வளர்ச்சியடைந்து இரு நாடுகளுக்கிடையேயுள்ள நேச உறவுகள் பலப்பட இக்கண்காட்சி பெரிதும் உதவும்.

வியாழக்கிழமை ஆரம்பமாகிய இக்கண்காட்சி இம்மாதம் மூன்றாந்திகதிவரையும் நடைபெறும். தினமும் செக். ஸ்தானிகராலய தகவல் பகுதியினரால் திரைப்படக்காட்சி காண்பிக்கப்படும்.

---

# விவசாயிகள் மீதுவழக்கு!

## பங்கீட்டரிசிப்புத்தகம் ஒப்படைக்காவிட்டால்

கொழும்பு, வெள்ளி

**பங்கீட்டரிசிப் புத்தகங்களைத் திருப்பி ஒப்படைக்காத விவசாயிகள் மீது வழக்குத் தொடரப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.**

இது சம்பந்தமாக உணவுக் கமிஷனர் திரு. ஆர். எல். அர்னேல்டா, மாவட்ட உணவுக் கட்டுப்பாட்டதிகாரிகளுக்கும், உதவி உணவுக் கட்டுப்பாட்டதிகாரிகளுக்கும். அனுப்பியுள்ள சுற்று நிருபமான்றில் விவசாயிகள் தங்களது பங்கீட்டரிசிப் புத்தகங்களைத் திருப்பி ஒப்படைக்காமலிருக்கக்கூடாதென்றும், அப்படி விவசாயிகள் தங்களது பங்கீட்டரிசிப் புத்தகங்களைத் திருப்பி ஒப்படைக்காவிட்டால் அது ஒரு குற்றமாகக்கணிக்கப்பட்டு அவர்கள் மீது வழக்குத் தொடரலாம் என்றும் அறிவித்துள்ளார்.

பங்கீட்டரிசிப் புத்தகங்களைக் காணவில்லை என்று விவசாயிகள் முறையிட்டிருந்தால் இந்தச் சம்பவத்தை குறிப்பிட்ட இடத்திலுள்ள மாவட்ட ரெவனியூ அதிகாரிகள்; கச்சேரி கூட்டுறவுச் சங்கங்கள், கூட்டுறவுப் பண்டகசாலைகள் ஆகியவற்றுக்குத் தெரிவிக்க வேண்டும் என்றும் அந்தச் சுற்று நிருபம் கூறுகின்றது.

வெளியிடங்களில் தங்களது காணி இருப்பதைமுன்னிட்டு வெளியிடங்களில் வசிக்கும் விவசாயிகளிடமிருந்து கூப்பன் பெறுவதை பல்வேறு கச்சேரிகள் நேரடி நடவடிக்கை மூலம் நடைமுறைக்குக் கொண்டுவருமெனத் தெரிகிறது.

---

# செய்தித் திரட்டு

### பிரதிஷ்டை

ஊர்காவற்றுறை, வெள்ளி

புங்குடுதீவு-மடத்து வெளி ஸ்ரீபாலசுப்பிரமணிய தேவஸ்தானத்திற்கு அருகாமையில் புதிதாக அமைக்கப்பட்ட சிவ ஆலயத்தில் ‘நாச்சுமார்’ என அழைக்கப்படும் புவனேஸ்வரி அம்பாள்விக்கிரகப்பிரதிஷ்டை இம் மாதம் 16-ந்திகதி நடைபெற ஏற்பாடாகி வருகிறது. நயினுதீவு சிவ ஸ்ரீ கே. கைலாசநாதக்குருக்கள் பிரதிஷ்டையை நடாத்தி வைப்பார்.

∴ ∴ ∴

### திரைப்படக்காட்சி

ஊர்காவற்றுறை, வெள்ளி

அமெரிக்க தகவல் பகுதியின் திரைப்படப்பிரிவினர் சென்ற புதன்கிழமை இரவு சரவணை கிராமமுன்னேற்றச் சங்க மண்டபத்தில் திரைப் படக்காட்சியைக் காண்பித்தனர். சரவணை சேவாமன்ற அனுசரணையில் நடைபெற்ற இபபடககாட்சியைப் பாடசாலை மாணவர்களும், பெற்றேரும் கண்டுகளித்தனர்.

∴ ∴ ∴

### மைதானம்

கோப்பாய், வெள்ளி

ஆவரங்கால் மத்தியசனசமூக நிலையத்தின் கோரிக்கைககு இணங்க ஆவரங்காலில் ஒரு பொது விளையாட்டு மைதானம் நிறுவுவதற்கு பண உதவி அளிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. விளையாட்டரங்கு 35 பரப்புக்கொண்ட விஸ்தீரணமுடையதாக இருக்குமென நம்பப்படுகிறது.

∴ ∴ ∴

### அபராதம்

பருத்தித்துறை, வெள்ளி

உடுப்பிட்டியைச் சேர்ந்த தம்பிமுத்து நவரத்தினம் என்பவர் உத்தரவின்றி சாராயம் விற்றதாக அவர் மீது குற்றம் சாட்டப்பட்டு தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் எதிரி தமது குற்றத்தை ஒப்புக்கொள்வதாகக் கூறியதைத் தொடர்ந்து நீதிபதி திரு. அ. வைத்திலிங்கம் எதிரிக்கு 200 ரூபா அபராதம் விதித்து தீர்ப்பு வழங்கினர்.

∴ ∴ ∴

### இலவசம்

பருத்தித்துறை, வெள்ளி

கரவெட்டி அரசடி சனசமூக நிலைய ஆதரவில் மார்ச் மாதம் 4-ந் திகதியன்று அமெரிக்க ஸ்தானிகராலயத்தாரால் செய்திப்படங்கள் இலவசமாகக் காட்டப்படுவதற்கு ஏற்பாடாகி இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

∴ ∴ ∴

### நடைபெருது

பருத்தித்துறை, வெள்ளி

பருத்தித்துறை சித்திவிநாயகர் பாடசாலையில், பிற்பகல் பாடசாலையாக நடைபெற்றுவந்த சின்னையா ஞாபக பாடசாலை, இம்மாதம் முதல் நடைபெற மாட்டாதென அறியப்படுகிறது. இப் பாடசாலை ஆசிரியர்கள் பாடசாலையில் பிள்ளைகள் இல்லாத காரணத்தால் பிறஇடங்களுக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

---

# ‘காமன்வெல்த் விஸ்தரிக்கப்படும்’

## டீபன்பேக்கர் நம்பிக்கை

லண்டன், பெப். 28

‘காமன்வெல்த்,பரஸ்பரம் நல்லெண்ணத்தை வளர்க்கவும் சகிப்புத் தன்மையையும் ஒற்றுமையையும் ஒத்துழைப்பையும் வளர்க்கவும் உகந்த ஒரேயொரு சுதந்திர இயக்கம் என்பதை அதனது சேவையால் நிரூபித்துவிட்டது’ என கனடா பிரதமர் திரு. ஜோன் டீபன் பேக்கர் லண்டனில் தமக்களிக்கப்பட்ட வரவேற்பின்போது பேசுகையில் கூறினர்.

திரு. டீபன்பேக்கர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

காமன்வெல்த் போன்று ஒரு சுதந்திர இயக்கத்தை மக்கள் முன் எப்பொழுதும் கண்டதே கிடையாது.

காமன்வெல்த் இன்னும் பத்து வருடங்களில மிகவும் நன்கு விஸ்தரிக்கப்படும் என நான் நம்புகின்றேன்.

கடந்தசில வருடங்களில் சுதந்திரமடைந்த 13 புதிய தேசங்கள் காமன்வெல்த்தில் அங்கத்துவம்வகிக்க தாமேவிரும்பி முடிவுசெய்துள்ளன.

காமன்வெல்த்தின் குறிக்கோள் சமீபகாலங்களில் விரிவாக்கப்பட்டுள்ளன. இதில் சேரவிரும்பும் எந்த ஒரு நாட்டுக்கும் பிரதிநிதித்துவம் மறுக்கப்படக்கூடாது என நான் கருதுகிறேன். காமன்வெல்த்தின் கனவும் நம்பிக்கையும் இதுதான்.

இருதேசங்கள் காமன்வெல்த்தைவிட்டு விலகிச்சென்றாலும் இதில் ஒளி வீசிக்கொண்டிருக்கிறதென்பதை இத்தேச மக்கள் உணரத் தவறமாட்டார்கள்.

---

# மீண்டும் பூமியதிர்ச்சி

பென்காசி, மார்ச் .1

லிபியாவில் மீண்டும் நேற்று பூமியதிர்ச்சி ஏற்பட்டது. சில தினங்களுக்கு முன் ஏற்பட்ட பூமியதிர்ச்சியில் சேதமடையாமல் எஞ்சியிருந்தகட்டடங்களும் நேற்று சேதமடைந்தன. பூமியதிர்ச்சியினல் பாதிக்கப்பட்ட பகுதிக்கு உதவிக்குச் சென்றிருந்த ராணுவத்தினரின் முகாமும் நேற்று சேதமடைந்தது.

# வானொலி நிகழ்ச்சிகள்

## கொழும்பு

### சனி 2-3-63

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 கத்தோலிக்க நற்சிந்தனை, 7-15 தேர்ந்த இசை, 7-45 திரை இசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 இளைஞர்மன்றம், 5-45 திரை இசை, 6-15 கிராமசஞ்சிகை, 6-45 எஸ். செல்லத்துரை — வயலின்.

இரவு 7-15 கண்டதும் கேட்டதும், 7-30 நேயர்விருப்பம், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 ஈ. திருநாவுக்கரசு — பேச்சு, 9-30 ஏ. நடராஜா — பாட்டு.

### ஞாயிறு 3-3-63

காலை 6-45 பாமாலை, 6-55 கத்தோலிக்க நற்சிந்தனை, 7-15 தேர்ந்த இசை, 7-45 திரை இசை, 8-15 தமிழ் மூலம் சிங்களம், 8-30 ஞானாஞ்சலி, 9-15 முஸ்லிம் சமயப்பாடசாலை, 9-30 திரை இசை, 11-30 சிறுவர் மலர்.

பகல் 12-15 நேயர்விருப்பம், 1-00 மாதர்நிகழ்ச்சி.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 மனோன்மணி சனகசபாபதி — பாட்டு, 5-45 திரைக்குரல், 6-10 குரல் வகை, 6-30 தாளவாத்தியக் கச்சேரி.

இரவு 7-00 மாதர் கேட்டவை, 7-30 கே. மாதவன் — பாட்டு, 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 'நல்லதோர் வீணை செய்தே' — இசைநாடகம், 9-45 குரல்வகை, 10-15 தேர்ந்த இசை.

## திருச்சி

### சனி 2-3-63

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-45 மங்கள இசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 அருள்வாக்கு, 7-05 வாத்திய இசை, 7-10 நிகழ்ச்சிக் குறிப்புகள், 7-30 செய்திக் குறிப்புகள், 7-35 திருநெல்வேலி எல். கணபதியாபிள்ளை — வயலின்

பகல் 1-00 துதிப்பாடல்கள், 1-20 பிள்ளைக்கனியமுது, 1-50 குரலிசை, 2-10 திருநெல்வேலி எல். கணபதியாபிள்ளை வயலின்.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடக சங்கீதம்), 5-45 வாத்திய இசை, 6-20 கிராமநிகழ்ச்சிகள்.

இரவு 'ஜப்தி' — நாடகம், 8-00 திரைப்பட இசை, 8-40 தேசபக்திப்பாடல்கள், 9-15 இசைக்கோவை, 9-30 அகில பாரத சங்கீதநிகழ்ச்சி.

### ஞாயிறு 3-3-63

காலை 6-45 மங்கள இசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 அருள்வாக்கு, 7-05 வாத்திய இசை, 7-10 நிகழ்ச்சிக்குறிப்புகள், 7-35 கே. எம். ராஜா — புல்லாங்குழல், 8-15 பி. லீலா — பாட்டு.

பகல் 12-00 நீங்கள் கேட்டவை, 12-30 சூரியகாந்தி: கதம்பநிகழ்ச்சி, 1-00 உணி மலர், 1-50 வாத்திய இசை, 2-10 பெண்ணுலகம், 2-30 மெல்லிசை, 3-00 கிருஷ்ணமூர்த்தி பாட்டு.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடகசங்கீதம்), 5-45 இசைப் பயிற்சி, 6-20 கிராமநிகழ்ச்சிகள்.

இரவு 7-30 'கொட்டு முரசே' — சித்திரம், 7-45 பி. மலையப்பசாஸ்திரி — பாட்டு, 9-15 தேசபக்திப் பாடல்கள், 9-45 ஆகாசவாணி ஒலிப்பதிவுகள்.

# கைப்பந்தாட்ட சுற்றுப்போட்டி

உடுப்பிட்டி, வெள்ளி

வடமராட்சி ஆசிரியர் சங்கத்தினரால் வருடா வருடம் நடத்தப்படும் கைப்பந்தாட்டப் போட்டி தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இது வரையும் நடைபெற்ற போட்டியில் வெற்றி பெற்ற கல்லூரிகளின் பெயர்கள் பின்வருமாறு:

கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரிக்கும் உடுப்பிட்டி அ. மி. கல்லூரிக்கு மிடையே நடைபெற்ற போட்டியில் விக்னேஸ்வரா வெற்றியீட்டியது. கட்டை வேலி ஞானசாரியர் கல்லூரிக்கும் வல்வெட்டித் துறை சிதம்பராக் கல்லூரிக்கும் நடைபெற்ற ஆட்டத்தில் சிதம்பரா வெற்றி பெற்றது. வதிரி திரு இருதயக் கல்லூரிக்கும் பருத்தித்துறை ஹாட்லிக்கும் இடையே நடைபெற்ற போட்டியில் ஹாட்லியும், உடுப்பிட்டி அ. மி. கல்லூரிக்கும் சிதம்பராவுக்கும் நடைபெற்ற போட்டியில் சிதம்பராவும். வெற்றி பெற்றன.

மத்தியஸ்தராகத் திருவாளர்கள். ரி. இரத்தினசிங்கம், எஸ். சிதம்பரநாதன், என். எம். நடராசா ஆகியோர் கடமையாற்றினர்கள்.

## இன்னிங்ஸ் வெற்றி

யாழ்ப்பாணம், வெள்ளி

சுண்டிக்குளி யுனைடெட் லையன்ஸ் கோஷடிக்கும் குருநகர் ஸ்ரோல்ற் றேஞ்சர்ஸ் கோஷ்டிக்குமிடையில் சென்ற திங்கட்கிழமை நடந்த சிநேகபூர்வமான கிரிக்கெட் போட்டியில் சுண்டிக்குளி யுனைட்டெட் லையன்ஸ் கோஷ்டி, ஒரு இனிங்சினால் வெற்றி பெற்றது முதலில் துடுப்பெடுத்தாடிய றேஞ்சர்ஸ் கோஷ்டி 13 ஓட்டங்களையே பெற்றது. அதனைத் தொடர்ந்து யுனைட்டெட் லையன் கோஷ்டி 5 விக்கட்டுகள் நஷ்டத்திற்கு 93 ஓட்டங்களைப் பெற்றது. றேஞ்சர்ஸ் கோஷ்டி இரண்டாவது இனின்ங்சில் 47 ஓட்டங்கப் பெற்றது.

## பரீட்சை பெறுபேறுகள்

கொழும்பு, வெள்ளி

கொழும்பு, விவேகானந்த சபையாரால் கடந்த வருடம் டிசம்பர் மாதம் 22, 23-ம் திகதிகளில் நடாத்தப்பெற்ற சித்தாந்த பிரவேச; பால பண்டிதர் பரீட்சைகளில் பின்வருவோர் சித்தியடைந்துள்ளனர்,

**சித்தாந்த பிரவேச பண்டிதர்**

திரு. ப. கணபதிப்பிள்ளை அரியாலை யாழ்ப்பாணம்; திரு மு. திருஞானசம்பந்தபிள்ளை வேலணை மேற்கு, வேலணை.

**சித்தாந்த**

**பால பண்டிதர்**

த. சுவாமிநாதன், சுவயல், சாவகச்சேரி; க. முத்துவேலு, கரணவாய் வடக்கு, கரவெட்டி.

## 250 பேர் வேலை இழப்பு

கொழும்பு, வியாழன்

குதிரைப்பந்தய சங்கத்தில் கடமையாற்றிவந்த ஊழியர்களுக்கு இன்றிலிருந்து வேலை நீக்க உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளது.

குதிரைப்பந்தயத் தடைகாரணமாகவே இவ்விதம் இவர்கள் வேலைநீக்கம் செய்யப் பட்டுள்ளார்கள்.

குதிரைப்பந்தயச் சங்கத்தில் கொழும்பிலும் நுவரேலியாவிலும் கடமையாற்றி வந்த 250 ஊழியர்கள் இப்பொழுது வேலையிலிருந்து விலக்கப்பட்டுள்ளார்கள்.

## 'மார்க்ஸீய வாதிகள் தொழிலாளர்களை ஏமாற்றிவிட்டனர்'

பதுளை, வெள்ளி

கடந்த 25 வருடகாலமாக மார்க்ஸீய வாதிகளான லங்கா சமசமாஜக் கட்சியினரும், கம்யூனிஸ்ட் கட்சியினரும் தொழிலாள வர்க்கத்தினரை ஏமாற்றி வந்துள்ளனர். சமீபத்தில் இடம் பெற்ற இ. போ. ச. ஊழியர் வேலை நிறுத்தம் இதற்கு ஒருசான்று.

இவ்வாறு வெலிமடை எம். பி. திரு. கே. எம். பி. ராஜரத்ன இங்குள்ள தர்மதூதா கல்லூரி மண்டபத்தில் பேசுகையில் கூறினர்.

ஜாதிக விமுக்திப் பெரமுனையின் ஆதரவில் ஹெலபீமா ஜாதிக வத்துகம்கருசமித்தி என்னும் பெயரில் இங்குள்ள சிங்கள தோட்டத் தொழிலாளர்களிடையே உருவாக்கப்பட்ட தொழிற்சங்கத்தை அங்குரார்ப்பணம் செய்துவைத்துப் பேசுகையிலேயே திரு. கே. எம். பி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

திரு. ராஜரத்தின மேலும் பேசுகையில் கூறியதாவது:

எதிர்க்கட்சித் தலைவர்கள் பிற்போக்குச் சக்திகளுடன் தொடர்பு கொண்டுள்ளதால் தொழிலாளர்களும் விவசாயிகளும் உதவியின்றித்தனித்து நிற்கின்றனர்.

இந்த மார்க்ஸிஸ வாதிகள் சிறிமா அரசாங்கத்தில் சேருவதற்கும் முயற்சி செய்துள்ளார்கள்.

## மாநகரசபை கட்டடத்தில் வெடிப்பு

நீர்கொழும்பு, வெள்ளி

நீர்கொழும்பு மாநகரசபையின் புதிய நிர்வாகக் கட்டடத்தில் வெடிப்புகள் தோன்றியுள்ளதாக மாநகரசபை விசேஷக் கூட்டத்தில் கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

இதுசம்பந்தமாக டாக்டர் ஹெக்டர் எச். பெர்னண்டோவினால் கொண்டுவரப்பட்ட பிரேரணையில், இந்தக் கட்டடத்திலுள்ள சீர்கேட்டை ஆராந்து அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்குமாறு ஒரு தகுதி வாய்ந்த என்ஜினியரிங் கம்பனியைக் கோரவேண்டுமெனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இப்பிரேரணை 3 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப் பட்டது.

## 3000 பேர் இங்கு உண்டு

### மருத்து வதாதி ஒருவரு மில்லை

குருநாகல், வெள்ளி

3000 பேருக்குமேல் வசிக்கும் கிராமமான தொரயாயாவில் ஒரு மருத்துவத் தாதியும் இல்லாதிருப்பதால் இங்குள்ள மக்கள் மிகக அவதிக்குள்ளாக வேண்டியிருக்கிறது.

இங்குள்ள கர்ப்பிணிகள் சிகிச்சை எதுவும் பெறுலதாக இருந்தால் இங்கிருந்து 8மைல் தூரத்திலுள்ள அலாகொல தெனியா என்ற இடத்துக்குச் சென்றே சிகிச்சைபெறவேண்டியுள்ளது. இதனல் இவர்கள் மிக்க கஷ்டப்படவேண்டி நேரிடுகிறது. பல சந்தர்ப்பங்களில் பரிதாபமான முடிவுகள் இங்குள்ள கர்ப்பிணிகளுக்கு ஏற்பட்டு விடுகின்றன. இங்குள்ள வாகனப் போக்கு வரத்து வசதிகளும் வீதிகளின் படுமோசமான நிலையும் இந்தக் கர்ப்பிணிகள் 8 மைல் தொலைவிலுள்ள மருத்துவ நிலையத்துககுச் செல்வதற்கு மிக்க இடையூறு அளிப்பதாக விருக்கிறது.




நாளுக்கு நாள் கடின பாவனைக்கு நிகரற்று விளங்குவது.

KANEBO POPLIN

கனபோ பொப்ளின்

ஆமாம், நாளாந்தம் கடினமாக உழைப்போர்க்கு உகந்த சிறந்த கடினமான, நன்கு பாவிக்க வல்ல புடவை இதுவே! கனபோ பொப்ளின்பாடசாலை யூனிபோம்களுக்கும் கநடே தார் ஷர்ட்டுகளுக்கும் மிகச் சிறந்தது. வெள்ளையிலும், மென்மையான பல வண்ணங்களிலும் கிடைக்கும். சாயம் போகாது என்பதற்கு உத்தரவாதமுடையது.

ஏகவினியோகஸ்தர்கள்: ஸி. டப்ளியூ. ஈ.

கிடைக்குமிடம்: ஸி. டப்ளியூ. ஈ. இலாகா ஸ்டோர், கோட்டை, கொழும்பு. மக்கலம் ரோட், மெயின் வீதி, புறக்கோட்டை, மருதானை மற்றும் வெளியூர்கள்

ஞாபகமிருக்கட்டும் ஸி. டப்ளியூ. ஈ. CWE தரத்திலும் ரகத்திலும் சிறந்ததைத் தருகிறது.

CWE/ /113

# பிரேத ஊர்வலத்தில் இரண்டு லட்சம் மக்கள்

## பல ராஜ்ய சட்டசபைகள் ஒத்திவைக்கப்பட்டன

புதுடில்லி, மார்ச் 1

டாக்டர் ராஜேந்திர பிரஸாத்தின் மரணத்துக்கு அனுதாபம் தெரிவிக்குமுகமாக ராஜ்ய சட்டசபைகள் ஒத்திவைக்கப்பட்டன.

பாட்னவில் கங்கைக்கரையில் டாக்டர் பிரஸாத்தின் சடலத்துக்கு அவரது புதல்வர் தீயிட்டார். இன்றுகாலை 10 மணிக்கு ஆரம்பமான ஸ்ரீரத ஊர்வலத்தில் பிகார் ரெஜிமெண்டைச் சேர்ந்த 1000 அதிகாரிகளும் பொலிசாரும் அணிவகுத்துச்சென்றனர். 2 லட்சம் மக்களுக்கு மேல் கலந்துகொண்டார். பிரஸாத்தின் குடும்பத்தினரும், ஆசிரமவாசிகளும், நண்பர்களும் ராம பஜனை இசைத்துச் சென்றார்கள்.

மக்கள் கூட்டம் அதிகமாதி, பல தடவையில் பொலிஸ் கட்டுப்பட்டை மீறியது. மரங்களிலும் மக்கள் ஏறிநின்று ஊர்வலத்தைக் கண்ணுற்றனர். ராஷ்டிரபதி, பிரதமமந்திரி, கவர்னர்கள், முதன் மந்திரிகள் ஆகியோரின் மலர்வளையங்கள் சடலத்தின்மீது வைக்கப்பட்டிருந்தன.

பம்பாய், கல்கத்தா மார்க்கெட்டுகள் மூடப்பட்டன.

தமிழ் நாடு கீழ்சட்ட சபை அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றியதுடன் கூட்டத்தை ஒத்திவைத்தது. முதன் மந்திரி காமராஜர் எதிர்க்கட்சித்தலைவர் திரு. நெடுஞ்செழியன், சபாநாயகர் செல்லபாண்டியன், மந்திரி பக்தவத்சலம் ஆகியோர் ராஜன்பாவுக்கு புகழஞ்சலி செலுத்தினர்.

கேரள சட்டசபை இன்று தன் கூட்டத்தை ஒத்திப்போட்டது. ஆந்திர சட்டசபையும் இன்று அஞ்சலி செலுத்தியபின் ஒத்திவைக்கப்பட்டது.

மகாராஷ்டிர'வில் இருசட்டசபைகளும் அனுதாபத்தீர்மானம் நிறைவேற்றியபின் ஒத்திவைக்கப்பட்டன.

உத்தரபிரதேச சட்டசபைகள் இரண்டும் ஒத்திவைக்கப்பட்டன. மேற்கு வங்காளத்தின் இருசட்டசபைகளும் ஒத்திவைக்கப்பட்டன. முதன் மந்திரி டாக்டர் பி. ஸி. ஸென், ராஜன்பாவுன் புதல்வருக்கு அனுதாபத்தந்தி அனுப்பியதுடன், தகனக்கிரிகையில் கலந்துகொள்ளும் பொருட்டு பாட்ன சென்றார்.

மைசூரின் 2 சட்டசபைகளும் அனுதாபத் தீர்மானங்கள் நிறைவேற்றின.

**லோக சபையில்**

நிதிமந்திரி மொரார்ஜி தேசாய் கூறியதாவது:-

"நாடுமுழுவதுமே துக்கத்தில் ஆழ்ந்துள்ளது. பாரதத்தின் ஒரு சிறந்த பிரஜையாக ராஜன்பாபு வாழ்ந்தார். தமது வாழ்வின் ஒருபகுதியை நாட்டின் சுதந்திரத்திற்காகவே செலவிட்ட உத்தமரான பிரசாத் தத்துவத்துறையிலும், எளிமையிலும் சிறப்புடன் விளங்கினர்".

கம்யூனிஸ்ட் தலைவர் திரு. ஏ. கே. கோபாலன் "பாரதத்திற்கு ஏற்பட்ட ஓர் பேரிழப்பேராஜன்பாபுவின் மறைவு" என்று கூறினர்.

சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த திரு. என். ஜி. ரங்கா "பாரதம் சிறந்ததொரு கர்மயோகியை இழந்துவிட்டதெனக்" கூறினர்.

பல்வேறு கட்சித்தலைவர்களும் பிரசாத்தின் மறைவுககு பாராட்டஞ்சலி செலுத்தினர். சபையின் ஆழ்ந்த அனுதாபத்தை பிரசாத்தின் குடும்பத்தினருககு தெரிவிப்பதாக சபாநாயகர் கூறினர்.

ராஜ்ய சபையில் டாகடர் ராஜேந்திரப்பிரசாத் கலாசாரப் பண்பின் சின்னமாகவும், சான்றாண்மைகரு 'எடுத்துக் காட்டாகவும் விளங்கினர் என்று சபைத்தலைவர் ஹாபீஸ் முகம்மது பாராட்டுச் செலுத்தினர்.

ஆங்கிலோ இந்தியத் தலைவர் திரு. பிராங்க அந்தனி, நாஞ்சில் மனோகரன் ஆகியோரும் புகழ்மாலை செலுத்தினர்.

## ஐயாறன்

(4ம் பக்கத் தொடர்ச்சி)

யான மோசடிப் பேர்வழிகளின் விளம்பரத்தை இனி ஏற்கவேண்டாமென்றும் ஓரன்பர் மிக மனம்நொந்து எழுதுகிறார். இவ்வித விளம்பரம் வெளியானதுபற்றி மிக வருந்துகின்றும். இப்படி விளம்பரம் செய்பவர் நல்லவரா அல்லரா என்பதை முன்கூட்டி எப்படி அறிவது? பிணைப்பணம் கட்டுபவர் மிக எச்சரிக்கையாக இருக்கவேண்டுமென்றே இதை எழுதுகிறேன்.

இவ்விஷயம் பொலிஸுக்குப் புகார் செய்யப்பட்டிருப்பதாகவும் அவர்கள் நடவடிக்கை எடுப்பாதவும் தெரிகிறது.

சிங்களத்தகுதிப்பரீட்சை

# மாநகரசபை ஊழியருக்கு 'கடமைலீவு' மறுப்பு

## மேயர் சுற்றறிக்கை

யாழ்ப்பாணம் சனி

இன்று நடைபெறவிருக்கும் அரசாங்க ஊழியருக்கான தகுதிப்பரீட்சைக்கு தோற்றி பரீட்சை எழுதவிருக்கும் மானகரசபை ஊழியர்களுக்கு 'கடமைலீவு' வழங்க முடியாதென்று மேயர் டாக்டர் ஏ. தர்மலிங்கம் அறிவித்துள்ளார்.

மாநகரசபை ஊழியர்களுக்கு விடுத்த ஒரு சுற்றறிக்கையில் மேயர் பின்வருமாறு தெரிவித்துள்ளார்:

தமிழ்மொழி விஷயத்தில் அரசாங்கம் பண்பற்ற, எதிர்ப்பு மனப்பான்மையையுடைய கொள்கை பின்பற்றுவதால் மாநகரசபை ஊழியர்களை, சிங்களத் தகுதிப் பரீட்சை எழுத அனுமதிக்கக் கூடாது என்று பொதுமக்கள் பலர் என்னைக் கேட்டுக் கொண்டனர்.

மொழிப்பிரச்சனையில் மாநகரசபை ஊழியர்கள் தாங்களே தீர்மானித்துக் கொள்ள வேண்டிய, அவர்களது சுதந்திரத்தில் நான் தலையிட விரும்பவில்லை. ஆனல் நாளை (இன்று சனிக்கிழமை) சபைக்கு வராமலிருக்கும் சபை ஊழியர்களுக்கு 'கடமைலீவு' வழங்குவது எங்களுக்கு ஒழுங்கல்ல ஏனெனில் அப்படி வழங்குவது யாழ்ப்பாண மக்களின் மனநிலைக்கு மாறுபட்டதாகும்.

**திமருலையில் எழுதுவினைஞர் முயற்சி**

திருக்கோணமலையில் சிங்களத்தகுதிப் பரீட்சை எழுதுவதற்கு முன்னூறுபோர் விண்ணப்பித்திருந்த போதிலும் பெருந்தொகையானோர் பரீட்சை எழுதமாட்டார்களென்றும் பரீட்சை எழுதுவதற்கு வழங்கப்பட்டிருந்த பிரவேச அட்டைகளைப் பலர் தம்மிடம் கொடுத்து விட்டதாகவும் எழுதுவினைஞர் சங்கப் பிரதிநிதியொருவர் தெரிவித்துள்ளார்.

பரீட்சை நிலையங்களுக்குச் சமிபத்தில் எழுதுவினைஞர் சங்கப் பிரதிநிதிகள் நின்று பரீட்சை எழுதவேண்டாமென்று கேட்டுக் கொள்வார்களாம். இப்பிரதிநிதிகள் சகல காரியாலயங்களுக்கும் சென்று பரீட்சை எழுதவேண்டாமென கேட்டுக்கொண்டதாயும், தங்கள் கோரிக்கை 100 சதவிகித வெற்றியளிக்கும் என்றும் தெரிவித்தார்.

## பீக்கிங் அனுமதி அளிக்கவில்லை

பீக்கிங், மார்ச். 1

சீனவில் காவலிலுள்ள வீரர்களைப் பார்வையிட இந்திய செஞ்சிலுவைச் சங்கத்திற்கு அனுமதி கோரப்பட்டதற்கு, சீன இன்னும் இணக்கம் தெரிவிக்கவில்லை என அறிவிக்கப்பட்டது. முன்பு சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் கோரிய அனுமதியையும் சீன நிராகரித்தது ஞாபகமிருக்கும்.

## நீதிமன்றத்தில் 'ஈழநாடு'

யாழ்ப்பாணம், சனி

வடபகுதி அசைஸ் நீதிமன்றத்தில் திரு. ஸ்ரீஸ்கந்தராஜா 'ஈழநாடு' பற்றியும் குறிப்பிட்ட ஒரு சம்பவம் நிகழ்ந்தது. வழக்கு விசாரணைக்கு வராமலிருந்த ஜூரிகளில் ஒருவரான திரு. காராளபிள்ளை சிவப்பிரகாசம் இன்று நீதிமன்றத்தில் ஆஜரான போது 'ஈழநாட்டைப் பார்த்துவிட்டுத் தான் வந்து சேர்ந்தீரோ"என்று கேட்டார். தாம் நீதிமன்றத்துக்கு வராத காரணத்தை தெரிவிப்பதற்குத் திங்கட்கிழமை வரை அவருக்கு அவகாசம் கொடுக்கப் பட்டுள்ளது.

## தமிழரசு வாலிப முன்னணி

யாழ்ப்பாணம், சனி

இலங்கைத் தமிழரசுக்கட்சி வாலிபமுன்னணியின் செயற்குழுக்கூட்டம் நாளைமாலை கட்சிக் காரியாலயத்தில் நடைபெறவிருக்கிறது. வாலிப முன்னணியின் எதிர்கால நடவடிக்கைகள், மகாதேசாதிபதியின் யாழ்ப்பாண விஜயம், கிளைகள் ஆரம்பிக்கும் யோசனை என்பன உட்படப் பல முக்கிய விஷயங்கள் பற்றி இச்செயற்குழுக்கூட்டத்தில் ஆராயப்படவிருக்கிறது.

பாராளுமன்ற உறுப்பினர்களும் இச்செயற்குழுக் கூட்டத்தில் கலந்துகொள்வார்கள் என்று தெரிகிறது.

## கென்னடி அனுதாபம்

வாஷிங்டன், மார்ச். 1

அமெரிக்க ஜனதிபதி திரு. கென்னடி இந்திய ஜனதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணனுக்கு அனுப்பி வைத்துள்ள செய்தியொன்றில் குறிப்பிட்டிருப்பதாவது:

நமககு சிறந்த தலைமையாளராக ராஜன்பாபு விளங்கினர். அவர் நமக்கு புதிய ஊக்கத்தைத்தந்தவர். நம்மைவிட்டுப் பிரிந்தாலும் அவரது நினைவு நமககென்றும் புதிய ஊககத்தைத்தரவேண்டும்.

## மாக்மில்லன் ஆதரவு

லண்டன், மார்ச்.1

பொது உதவியாக இருக்குமானல் நேட்டோ, வார்சா ஒப்பந்த நாடுகள் அனாக்கிரமிப்புஒப்பந்தம்செய்துகொள்ள பிரிடன் சம்மதிக்குமென பிரதம மந்திரி திரு. மாக்மில்லன் கூறினர்.

## மாணவர் கஷ்டம்

புங்குடுதீவு, வியாழன்

புங்குடுதீவு அரசினர் மகா வித்தியாலயத்தில் 460 க்கதிகமான பிள்ளைகள் கல்வி பயின்று வருகின்றார்கள். அப்படியிருந்தும் ஏறக்குறைய 300 கதிரை மேசைகளே பாவனைக்கு இருக்கின்றன. இதனல் இரண்டு கதிரை மேசைகளை மூன்று, நான்கு பிள்ளைகள் பாவிக்க வேண்டியிருக்கிறது. மாணவர்கள் கதிரை மேசைகள் பற்றாது பெரிதும் கஷ்டம் அடைவதாகவும். இது பற்றி கல்விப்பகுதியார் வதிக கவனமெடுப்பதாகத் தெரியவில்லை என்றும் அறிவிக்கப்படுகிறது.

## மூன்று மாதம் சிறை

### பொல்லால் தாக்கினராம்

மாவிட்டபுரம், வெள்ளி

மயிலிட்டியைச் சேர்ந்த சின்னவன் தில்லைநாயகம் என்பவரை அதே ஊரைச்சேர்ந்த கொத்தன் வெள்ளையன் பொல்லால் தாக்கிக் காயம் விளைவித்ததாகக் காங்கேசன்துறை பொலிசாரால் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் மல்லாகம் மாஜிஸ்டிரேட் எதிரியை குற்றவாளியாகக்கண்டு 3 மாதக் கடுமியச் சிறைத்தண்டனை விதித்தார்.

எதிரி தரப்பில் திரு. ஏ. குமரகுரு ஆஜரானர். வழக்காளிதரப்பில் இன்ஸ்பெக்டர் கந்தையாவின் உதவியுடனும், ஆர்.ஜே. செல்வரத்தினம் அனுசரணையுடனும், திரு.டி. கணேசலிங்கம் ஆஜரானர்.

## யாழ்ப்பாணம் போஸ்ட்மாஸ்டர்கள் தீர்மானம்

யாழ்ப்பாணம், சனி

போஸ்மாஸ்டர்களின் யாழ்ப்பாணக்கிளை, தாய்ச்சங்கத்திற்கு திறைசேரி விடுமுறை நாட்களைக் குறைத்தது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கும்படிகோரி தீர்மானமொன்று நிறைவேற்றி அனுப்பியுள்ளது. இதுசம்பந்தமாக தாய்ச் சங்கத்துடன் பேச்சுநடத்துமுகமாக இன்று போஸ்மாஸ்டர் சங்கத்தின் யாழ்ப்பாணக் கிளைத்தலைவரும் காரியதரிசியும் இன்று கொழும்புக்குச் செல்லவிருக்கின்றனர்.

திறைசேரி இதுவரை காலமும் ஊழியர்கள் அனுபவித்து வந்த 49 விடுமுறை நாட்களை 30 ஆகக்குறைத்துள்ளது. மேலும் தொடர்ச்சியாக 150 நாட்கள் வேலைசெய்தால் 30 நாட்கள் விடுமுறை அனுபவிக்க முடியும். 150 நாட்களுக்குள்ளாக சுகவீனம் காரணமாக மாக லீவுஎடுத்தாலும் அவர்களுக்கு அரைச்சம்பளமே வழங்கப்படும் என்று அறிவிததிருந்தது.

கொழும்பு, வெள்ளி

போக்குவரத்துப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு திரு. எம். பி. டி. இஸட். சிறிவர்த்தனவை தொழில் தேசியமய சேவைகள் மந்திரி பதவியிலிருந்து நீக்கவேண்டியது அவசியம் என்று ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் கொழும்புக் கிளைக் காரியதரிசி திரு. என். பி. குணபாலா பிரதமருக்கு எழுதியுள்ள ஒரு கடிதத்தில் கேகாரியுள்ளார்.


விரைவில் எதிர்பாருங்கள்!

வீர காவியம் !!

சினிமாஸ் திரைகளில்

புதுமையான காதல்! புரட்சிகரமான வீரம்!!

திகைப்பூட்டும் திரைகடல் ஓவியம் !!!

★ பார்த்தோர் பரவசப்படுகிருர்கள்

★ பார்க்காதோர் பார்க்கத் துடிக்கிருர்கள்!

சிவாஜி கணேசன்
ஜெமினி கணேசன்
சாவித்திரி
முத்துலட்சுமி
வி. நாகையா
குமாரி ருக்மணி
எஸ். வி. ரங்கராவ்
ஜெமினி சந்திரா
எஸ். வி. சுப்பையா
ஏ. கருணநிதி




மற்றும் பலர் நடிக்கும்

பத்மினி பிக்சர்ஸ்

கப்பலோட்டிய தமிழன்

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) அஞ்சலி - ராமராவ் நடித்த பாலநாகம்மா

மனோகா (யாழ்ப்பாணம்) சிவாஜி கணேசன் சரோஜா தேவி நடித்த பாகப்பிரிவினை


இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட்' ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில்மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1963-ம் ஆண்டு மார்ச் மாதம் 2-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.